Free Circulation Germany- England
மணி: 74 - ஓசை: 334 ஆடி. July. 2024

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950

30 TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien & Schmuck
34 ஆவது ஆண்டு நிறைவு
தரமும், மலிவும், ஒரே இடத்தில்

Königswall 16 (Am Hbf) 44137 Dortmund
Tel:0231 162377

# ரணில் விக்கிரமசிங்க என்ன செய்யப்போகிறார்?

இலங்கையில் இருந்து ஆர்.பாரதி




இதழ்: 334

## வாழ்த்துகின்றோம்


நோர்வேஜிய மொழிவிருது
ஜொகான் சண்முகரத்தினம்!


Stern Award
துமிலன் செல்வகுமாரன்


பனைத்திருவிழா







# காணலை! காணலைக்!! கண்டான்!!!



பேரப்பிள்ளைகள் வீடு வருகிறார்கள் என்றால், தாத்தா அம்மம்மா பாடு கொண்டாட்டம்தான்.

அவர்கள் வளர்ந்தவர்கள் என்றால் அவர்களுக்கு விரும்பிய உணவு செய்வதில் காலை விடியும்.

குழந்தைகள் என்றால் ஆர்ப்பாட்டம் வேறு வித மாக இருக்கும்.கைக்கு எட்டிய தூரம் எதுவும் இல் லாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

தொலைபேசி றிமோட் முதல் உடையும் பொரு ட்கள் வரை. முக்கியமாக ரீப்போ விழும்பு குத்தாமல் சுவரோடு ஒட்ட வைக்கவேண்டும். கண்டதையும் வாய்க்குள் எடுத்து வைக்கும் வயது. எழும்பி பிடிப்ப தற்கு முன் முயல் மூன்றுகால் பாய்ச்சலில் ஓடிவிடும்.

கதவு காற்றுக்கு பூட்டுப்படாமல் இருக்க ஒரு பாரமான யானைக்குட்டி கதவோடு எப்பவும் இருக்கும். பேரன் வந்தால் அந்த யானை அவன் வாயுக்குள் குளிக்கும், எப்படியும் பறிக்க முடியாது.

நிலத்தில் இருப்பதால் அது அசுத்தம் என்று கொடுப்பதில்லை.ஆனால் அவனோ சுத்தித்தி சுத்தித்தி தேடி எடுத்திடுவான்.

நேற்று வந்தான். வந்ததும் யானை யைப்பார்த்தான், யானை இல்லை. அம்மம்மா பெரும் புத்திசாலி என்ற நினைப்போடு கண்ணுக்கு எட்டாத இடத்தில் ஒளித்து விட்டா.குசினியும், கோலும் ஒன்றான வீடு எமது.

பேரன் ஒரு சுற்று எங்கும் தவழ்ந்துவிட்டு தாத்தா மடிக்கும் வந்து இருந்து றீமோட் கேட்டான். அதற்கி டையில் கடைக்கு போன மகள் வந்து பேரனை அழைத்துபோனா.

மதியம் இரசம் வைக்க அம்மம்மா குட்டி கருங்கல் உரலை எடுத்தால் குட்டிக் கருங்கல் உரலின் உலக்கையைக் காணோம். வீடு எங்கும் தேடியும் காணவில்லை.இரசம் அன்று சடுதியாய், சொதியாக மாறியது. உரலும் வெறிச்சோடிக்கிடந்தது.

மறு நாள் பேரன் மீண்டும் வந்தான், குட்டி கருங் கல் உலக்கையை காணவில்லை என்று மகளிடம் கூற பேரனை உடன் நிலத்தில் இறக்கிவிட்டா.

அவசரம் அவசரமாக முயல் பாய்ச்சலில் குசினிக் குள் யாரும் போபாத ஒரு இடைவேளிக்குள், போனான், கையைவைத்தான்.

அம்மம்மா முகத்தில் சந்தோஷம், சம்பல் அரை த்தது. ஆம் கருங்கல் உரலின் குட்டி உலக்கையை நேற்று ஒளித்தவன் பேரன்தான்.

திரும்பி பார்த்தால் இப்ப கதவு க்கு அடியில் மிண்டுக்காய் இருந்த யானை யைக் காணவில்லை.

இதுவும் ஒரு வகை காணலை! காணலைக்!! கண்டான்!!! விளையாட் டுத்தானோ.




மாதவி




வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 334


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276


# ரணில் விக்கிரமசிங்க என்ன செய்யப்போகிறார்?




இலங்கையிலிருந்து
ஆர்.பாரதி


கொழும்பில் தன்னுடைய தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதன்மூலம் இரண்டு செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒன்று, ஜனாதிபதித் தேர்தலுக்கு ரணில் தயாராகின்றார் என்பது. இரண்டாவது, தனியான ஒரு தேர்தல் அலுவலகத்தைத் திறந்திருப்பதன்மூலம் ஐ.தே.க. சார்பில் ரணில் போட்டியிடப்போவதில்லை என்பதும் உணா்த்தப்பட்டுள்ளது.


அதாவது கட்சி சார்பாக ஒரு சுயாதீக வேட்பாளராகவே அவர் களமிறங்கப்போகின்றார் என்பதும் இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த நகர்வுகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் தேர்தல் நடைபெறும் என்பதை உறுதிப்படுத்துகிறதா என்று கேட்டால் எதிர்க்கட்சிகள் அதில் இப்போதும் சந்தேகத்தையே தெரிவிக்கின்றன. தேர்தல்கள் பின்போடப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று சொல்லிவிட முடியாது என்பதுதான் எதிர்க்கட்சிகளின் கருத்தாக இருக்கின்றது.

அவர்கள் இவ்வாறு கூறுவதற்கு இரண்டு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

முதலாவது, ஐ.தே.க. பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார சில வாரங்களுக்கு முன்னர் வெளியிட்ட அறிவிப்பு. ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் இரண்டு வருடங்களுக்கு பின்போடப்பட வேண்டும் என்ற கருத்தை அவர் முன்வைத்தார். தற்போதைய பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வந்து சுமூகமான ஒரு நிலை ஏற்பட்ட பின்னர் தேர்தல்களை நடத்துவதே நாட்டுக்கு நல்லது என்றவகையில் இதற்கு அவா் விளக்கமும் கொடுத்திருந்தார்.


ஐ.தே.க.வைப் பொறுத்தவரையில் பொதுச் செயலாளா் பதவி என்பது சக்தி மிக்கது. முக்கியமான – பொறுப்பான பதவியும் கூட. இவ்வாறான பதவி ஒன்றில் இருப்பவா் எழுந்தமானமாக – பொறுப்பற்ற வகையில் ஒரு கருத்தை வெளியிடுவார் என எதிர்பார்க்க முடியாது. தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களுடைய பிரதிபலிப்பு எவ்வாறானதாக இருக்கின்றது என்பதை



அறிந்துகொள்வது – நாடி பிடித்துப் பார்ப்பது இதன் நோக்கமாக இருந்திருக்கலாம்.

இரண்டாவது காரணம், அரசியலமைப்பை மீறாமல் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான வாய்ப்புக்கள் தொடா்பாக அரச உயர் மட்டம் சட்ட – அரசியலமைப்பு நிபுணர்களுடன் ஆராய்ந்துகொண்டிருப்பதாக வெளிவந்திருக்கும் தகவல்கள்.

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின்படி ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள். 2015 இல் மைத்திரி – ரணில் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தத்தின்படி இது ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. இந்தத் திருத்தம் மக்கள் கருத்துக் கணிப்புக்குச் செல்லவில்லை. அதனால், ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறுவருடங்களாக இருக்கலாம் என அரசியலமைப்பு வல்லுனர்கள் சிலர் குறிப்பிடுகின்றார்கள். இது தொடர்பில் சட்டமா



அதிபருடைய ஆலோசனை பெறப்படலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன.

அரசியலமைப்பில் உள்ள இந்தத் தவறைப் பயன்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தை இன்னொரு வருடத்துக்கு நீடிப்பதற்கு முயற்சிக்கலாம் என்ற கருத்து தற்போது அரசியல் களத்தைச் சூடாக்கியுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தைக் குறைப்பது என்பது மக்களுடைய இறைமையைப் பாதிப்பதாக அமையாது என்பதால், அதனை சர்வஜன வாக்கெடுப்புக்கு உட்படுத்தத் தேவையில்லை என்ற கருத்து ஒன்றும் முன்வைக்கப்படுகின்றது. ஆனால், ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பது மக்களின் இறைமையைப் பாதிப்பதாக அமையும் என்பதால்தான், அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அரசியலமைப்புச் சிக்கல் குறித்த வாதப் பிரதிவாதங்கள் அடுத்துவரும் வாரங்களிலும் தொடரும்.

தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக இதுவரையில் உத்தியோகபுர்வமாக அறிவிக்காமல் மௌனம் காக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணத்தில் எவ்வாறான உபாயம் இருக்கின்றது என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும். ஆனால், அவர் தன்கு இருக்கக்கூடிய அனைத்து கதவுகளையும்

18 ஆம் பக்கம் பார்க்க...





INNENSTADT WEST
தமிழர் அரங்கம்
ortel MOBILE
DORTMUND
தமிழர் தெருவிழா
Straßenfest der Tamilen 2024
06.09.2024
FR. 16:00 - 00:00
07.09.2024
SA. 11:00 - 00:00
08.09.2024
So. 12:00 - 19:00
3 நாட்கள்
வெள்ளி - சனி - ஞாயிறு
Dortmunder U - Park der Partnerstädte
Gemeinsam in Vielfalt Der Integrationsrat
Stadtteil-Schule
VKII RUHRBEZIRK e.V.
SIVAN DIGITAL
TKD
VMDO
வெற்றிமணி
அகரம்
தமிழ் ரைம்ஸ் TAMIL TIMES
IBC தமிழ்
Lankasri
ETR
PAARPOM
எம்தமிழ்
tamil nrw
0151633 633 33 | 0157 370 50 110 | 176 246 371 75 | 0151 279 909 90

# அழகுக்கும் அறிவிற்கும் உத்தரவாதம்: மனித முட்டைகள் விற்பனையில்



அமரர் பொ.கனகசபாபதி
(12 வருடங்களுக்கு
முன் கனடாவில் இருந்து
வெற்றிமணிக்கு
எழுதிய கட்டுரை)

உலகிலேயே மிகப் புதிய தொழில் ஒன்று பெண் களுடன் சம்பந்தப்பட்டதாய் வந்துள்ளது. அத்தொழில் இன்னொரு வருக்காகப் பிள்ளை பெற்றுக் கொடுப்பதை 'Surrogate Mother' என்பார்கள் ஆங்கிலத்தில். தமிழிலே அத்துர்ப்பாக்கிவதியை 'ஈன்றாள்' எனலாம். துர்ப்பாக்கியவதி என நான் குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. இதற்கு ஊதியமாகக் கிடைக்கும் தொகை வெறும் 15,000- 00 முதல் 20,000-00 டொலர் என்றே சமூகவியலாளர் கூறுகின்றனர். ஆனால், 6720 மணித்தியாலம் (280 x24) அடை காப்பதற்காகப் பெறும் தொகை மணித்தியாலம் ஒன்றினுக்கு மூன்று டொலர் கூட வரமாட்டாது.

எனினும், கனடாவிலே ஏறக்குறைய 60 பெண் மணிகள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறேன். இதிலேயும் ஒரு அனுகூலம் உள்ளதாக அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். வீட்டிலே இருந்து பிள்ளைகளையும் பராமரித்து இதனையும் செய்கிறோம். எனவே இது ஓர் மேலதிக வருமானம் தானே என்பது அவர்களுடைய வாதம்.

பழைய இலக்கியப் பாடல் ஒன்று ஞாபகம் வருகிறதா? காகத்தின் கூட்டிலே குயில் தன் முட்டையை இட்டுச் சென்று விட, காகம் தன் முட்டை போலக் குயிலின் முட்டையையும் அடைகாத்துப் பொரிப்பதை வாடகைத் தாய்மார் களான 'ஈன்றாள்' களினது நிலையும் காகம் போன்றதே. ஒரு வித்தியாசம். காகம் தான் அடைகாப்பது குயிலினது முட்டை என அறியமுடிய இயலாமையால் ஏமாற்றப்படுகிறது. ஈன்றாளோ தனது கருப்பையில் தான் சுமப்பது தனது முட்டை இல்லையென்பது தெரிந்தும் இயலாமையாலோ அல்லது பெருந்தன்மையாலோ இன்னொருவரின் முட்டையயை அடைகாக்கின்றார்.

இப்போது அடுத்த கட்டத்துக்கு நிலமை வந்துள்ளது. கூடு இரவல் எடுத்த நிலையின் தொடர்ச்சியாக முட்டையையும் இரவல் எடுக்கும் நிலை எய்தியுள்ளோம். முட்டை வியாபாரம் பழைய தொழில் மனித முட்டை வியாபாரம் மிகப் புதிய தொழில். பிரமாதமாக ஊதியம் கொட்டும் தொழில் போலத் தெரிகிறது. ஒரு முட்டைக்கு 10,000-00 டொலர் வரை கிடக்குமாம். 25,000 டெலர் கூடப் பெற முடியும் என்ற பேச்சு. மாத ஊதியம் 10,000-00 டொலர் பெரிய தொகை தானே. கிடைக்கக் கூடிய முட்டைகளின் எண்ணிக்கை தேவையை ஈடு செய்ய முடியாமல் இருப்பதே விலை இவ்வளவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்கிறார்கள்.

மனித முட்டை வியாபாரத்திற்கு இணையத் தளம்களிலே விளம்பரம் போடத் தொடங்கி விட்டார்கள். விரைவில் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சி, வானொலிகளிலும் வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. வருகிற வருடம் கனடிய அரசு மனித முட்டை விற்பதற்குத் தடை விதிக்கவுள்ளதாம்.தடையை மீறி விற்பவர்கள் 10 வருடச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் அல்லது 500,000-00 டொலர் அபராதம் செலுத்த வேண்டும். எனவே காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது நல்லது தானே. கிம்பர்லி குவார்டியோலா (Kimberly Guardiola) எனும் கலிபோர்னியா வாசியான பெண் இது வரை இருமுறை முட்டைகள் விற்றுள்ளார்.அவரின் விளம்பரமே அலாதி. கல்யாணத்துக்கு மாப்பிள்ளை தேடும் விளம்பரம் போல இருக்கிறது. 5அடி 11 அங்குல உயரமுடைய பச்சைக் கண்ணழகி, பார்ப்போரைக் கவரக் கூடிய கட்டான உடல் வாகு,அங்க வனப்பு மாத்திரமல்ல புத்திக் கூர்மையும் கச்சிதம்.புத்திக் கூர்மைத் திறன் 152. பெண்மணி முட்டை வாங்குவோருக்கு மறைமுகமாக உத்தரவாதம் ஒன்றினை அளிக்கிறார். "எனது முட்டையில் இருந்து உற்பத்தியாகவுள்ள பிள்ளை அழகுடைய புத்திக் கூர்மையுடைய பிள்ளயையாகவே இருக்கும்.

எனவே எனது முட்டையை நீங்கள் நம்பிக்கையுடன் வாங்கலாம்" என்பதே அவர் கொடுக்கும் உத்தரவாதம். இந்த முட்டை விருத்தியுறுவதற்கு விந்து ஒன்றுடன் இணைய வேண்டும். எனவே, பிறக்கப் போகின்ற பிள்ளையினுடைய அழகின் விஸ்தாரத்தையோ அறிவின் பரிமாணத்தையோ தாயினை வைத்துக் கொண்டு தீர்மானிப்பது சாத்தியமில்லை. இதனை அந்த அம்மையார் தெரிந்து கொள்ளவில்லையோ அல்லது ஏனைய வியாபாரிகள் போன்று அம்மையாரும் பாவனையாளரின் அறிவுத் தெளி வின்மையைத் தனக்குச் சாதகமாக்க முனைந்தாரோ தெரியவில்லை. ஜோர்ஜ் பேர்னார்ட் ஷோ ( George Bernard Shaw) என்னும் மிகப் பிரபலமான எழுத்தாளர் ஒருவர் இங்கிலாந்தில் வாழ்ந்தவர். அழகில் கொஞ்சம் அப்படியும் இப்படியும் தான். அக்காலத்திலே பிரபலமாயிருந்த ஒரு திரைப்பட நடிகை, நல்ல அழகி. அதனாலே அவருக்குக் கர்வம் அதிகம். அவர் ஒரு முறை பேர்னார்ட் ஷோவினை அணுகி 'நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டால் என்ன? என்னைப் போல் அழகும் உங்களைப் போல் புத்திக் கூர்மையும் உள்ள பிள்ளை பிறக்குமே! என்றாராம். "கேட்பதற்கு நல்லாய்தான் இருக்கிறது அம்மணி! ஆனால், பிறக்கின்ற பிள்ளைக்கு எனது அழகும், உனது மூளையும் இருந்தால் என்ன செய்வது" என்றாராம் பேனார்ட் ஷோ.. பதில் சொல்வதற்குப் பெண்மணி அங்கே நிற்பதற்கு அவருக்கென்ன பயித்தியமா?.



முட்டை விற்பதற்குரிய காரணத்தை தத்துவார்தமான விளக்கம் தந்து நியாயப் படுத்தப் பார்க்கின்றார் கிம்பர்லி. 'வீணே சிதைந்து போகப் போகின்ற முட்டைதானே! அது ஒருவருக்கு உதவட்டுமே" என்கிறார். இதில் நியாயம் இருப்பது பேலவே தெரிகிறது. ஒவ்வொரு மாதமும் பெண்ணின் சூலகம் உருவாக்கும் முட்டை கருக்கட்டப் படாவிட்டால் சிதைந்து அழிந்து விடுகிறது என்பது உண்மையே. வீணாகப் போகின்ற முட்டை இன்னொரு குடும்பத்திற்கு வாரிசை உருவாக்க உதவுகிறது என்பது பாராட்டப்பட வேண்டிது ஒன்றுதான். ஆனால் அது வியாபாரமாகும் பொழுதுதான் வாழ்வின் விழுமியங்கள் நொறுங்கிப் போவதைக் காணமுடிகிறது.

'மண் தின் பதை ஒரு மனிதன் தின்னட்டுமே"என்றே தனது செயலை ஒரு விபசாரியும் நியாயப் படுத்துகிறாள்.

முட்டையைவிலைக்கு வாங்குபவர்கள் உண்மையிலேயே அநுதா பத்துக் குரியவர்கள். அவர்களுக்கு முட்டை உருவாக்கும் திறன் இயற்கையாகவே இருக்கவில்லை. வளம்படுத்தும் மருந்துகள் (Fertility Drugs) எனப்படும் முட்டை உற்பத்தியைத் தூண்டும் மருந்துகள் எடுத்தாலும் முட்டைகள் உருவாகாத நிலை. எனவே, அவர்கள் வாரிசு ஒன்றினை உருவாக்கும் நோக்கிலே முட்டையை விலைக்கு வாங்குகிறார்கள். இவ்வியாபாரத்திலே முட்டையை விற்றவர் வாங்கியவர் இருவருமே சில கருமங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும். முட்டை சாதாரணமாக 28 நாட்களிலே சூலகத்திலிருந்து உதிர்க்கப் பட்டு விடுகிறது. எனவே, முட்டை உதிர்க்கப் படுவதற்கு சில நாட்களுக்கு முன்னரேயே அதனை ஊசி உறிஞ்சி மூலம் வெளியே எடுத்து வளர்ப்புக் கரைசலில் வளர்க்க வேண்டும். பின்னர் முட்டையை வாங்கியவருடன் சம்பந்தப் பட்ட ஆணினது விந்துவினால் கருக்கட்டவைக்கப்பட வேண்டும்.






Luckyfly
Emirates
SUMMER
OFFER
ஸ்ரீலங்கா சென்றுவர
குறைந்த விலையில் மகிழ்ச்சியாக
செல்ல...
QATAR
நீங்கள் விரும்பிய
நாட்களில் சுற்றுலா செல்ல
டிக்கெட் வசதி
செய்து தருகிறோம்...
இன்றே அழையுங்கள்!
BOOK ON CALL
info@lucky-fly.de
www.lucky-fly.de
0234 2399032
0179 14 84892



# மொபைல் போன்கள் நம் குழந்தைகளை ஆட்கொண்டுவிட்டன

"முன்பெல்லாம் ஒரு வீட்டில் நான் கைந்து குழந்தைகள் இருந்தாலும், இந்த அளவிற்கு அலட்டல் இல்லாமல் நன்றாகத்தான் வளர்ந்தார்கள். ஆனால் இப்போதோ,பெற்றவர்கள் குழந்தைகளைப் பொத்திப் பொத்தி வளர்க்கிறார்கின்றோம், கண்ணுல வெச்சி காப்பாத்துறோம்னு சொல்லிச் சொல்லியே அவர்கள் குழந்தைகளை வளர விடுவதேயில்லை" இப்படி நம் முந்தைய தலைமுறையினர் அடிக்கடி அலுத்துக்கொள்வதை கேட்டிருக்கின்றோம்.

முன்னைய தலைமுறையினைக் காட்டிலும்,தற்போது குழந்தை வளர்ப்பில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டிய அவசியமும் தேவையுமும்தான் என்ன? சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு வரையிலும் கூட சிறுவர்களின் வாழ்க்கை எப்படி இருந்தது? தினமும் பள்ளிக்குச் செல்வார்கள், ஆட்டம் பாட்டம் விளையாட்டு, வீடு திரும்பியதும் அவரவர் வசதிக்கு ஏற்றாற் போல உணவு ! படிப்பு, உறக்கம். வார இறுதிகளிலும் விடுமுறை நாட்களிலும் காலை முதல் மாலை வரையிலும் அக்கம்பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் விளையாட்டு . கூட்டுக் குடும்ப அமைப்பு இருந்தவரையிலும் ஒரே வீட்டில் நிறைய குழந்தைகள், பெரியவர்கள் இருந்தமையால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்தும், அன்பினைப் பொழிந்துகொண்டும் வாழ்ந்தனர். பல குழந்தைகள் ஒன்றுகூடி விளையாடும்போது ஏற்படும் நன்மைகள் ஏராளம். மற்ற குடும்பங்கள் பற்றிய அறிதல், விட்டுக்கொடுக்கும் பாங்கு, வெற்றி மற்றும் தோல்வி இரண்டையும் ஏற்றுக்கொள்ளுதல் போன்றவை சாதாரணமாக நிகழும். ஆனால் இன்றோ நம் குழந்தைகள் கூட்டாக ஓடியாடி விளையாடும் விளையாட்டுக்களை முற்றிலும் இழந்து வருகின்றார்கள் என்பதே யதார்த்தம். தனிக்குடித்தன பெருக்கங்கள், அயலவர்களுடன் பேச்சுவார்த்தை குறைவு போன்ற இன்னோரன்ன காரணங்களினால் நம் குழந்தைகளின் பெருவாரியான நேரத்தினை தொலைக்காட்சிகள் சுவீகரித்துக் கொண்டன என்பதைவிட மொபைல் போன்கள் நம் குழந்தைகளை ஆற்கொண்டுவிட்டன என்பதே கசப்பான உண்மை. உளவியல் ரீதியாகவும் வெற்றி தோல்விகளைச் சரிசமமாக கருதும் மனநிலை அற்றவர்களாக தோல்விகளை சகித்துக்கொள்ள இயலாதவர்களாக மாறிவருகின்றனர்.

எனவே பூங்கா, மைதானம், அல்லது வீட்டின் மொட்டைமாடியிலாவது குழந்தைகள் ஓடியாடி விளையாடும் சூழலை உருவாக்கித் தர வேண்டியது பெற்றோர்கள் பொறுப்பு. அது அவர்களின் உடல் ஆரோக்கியத்துக்கு மட்டுமின்றி, படிப்புச் சுமை தரும் அழுத்தங்களில் இருந்து மீட்டு மன ஆரோக்கியத்துக்கும் கைகொடுக்கும்.





பிரியா இராமநாதன்
(இலங்கை)

அனைத்துப் பெற்றோர்களுக்கும் தங்கள் பிள்ளைகள் மிகவும் வல்லவர்களாகவும், திறமைசாலிகளாகவும் உலகத்தோடு போட்டி போடுபவர்களாகவும் வளர வேண்டும் என்று எண்ணம் இருப்பது நியாயமான ஒன்றுதான். குறிப்பாக மனதளவில் வலிமையாக இருக்கும் படி குழந்தைகளை வளர்ப்பது இலேசுப்பட்ட காரியமல்ல. மனதளவில் குழந்தைகளை வலிமையானவர்களாக மாற்றி விட்டாலே அவர்களது வாழ்க்கையை அவர்களால் திறம்பட வழி நடத்த முடியும். ஆனால் இன்றைய பெற்றோர்கள் பலரும் தங்கள் குழந்தைகளை அவ்வாறு வலிமையானவர்களாக மாறும்படி வளர்க்கின்றோமா ?

நம்குழந்தைகள் திறமையானவர்களாகவும் வலிமையானவர்களாகவும் வளர வேண்டுமெனில் அவர்களது பிரச்சினைகளையும் சவால்களையும் அவர்கள் தனியாக சந்திக்க செய்ய வேண்டும். பெரும்பாலான நேரங்களில் நாம் குழந்தைகளுக்கு உதவி செய்கிறோம் என்று நினைத்துக் கொண்டு பல்வேறு செயல்களை செய்கிறோம். ஆனால் உண்மையிலேயே சில சமயங்களில் நாம் தள்ளி நின்று குழந்தைகளை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கும்போது அவர்களாகவே கற்றுக் கொள்வது ஏராளம். அதுமட்டுமன்றி பெற்றோராகிய நாம் செய்யும் இன்னொரு தவறுதான் அவர்கள் கேட்பதையெல்லாம் வாங்கிக்கொடுப்பது. இதனால் அத்தியாவசியமான அவசியமான பொருளுக்கும் ஆசையில் வாங்கும் பொருளுக்குமான வித்தியாசம் குழந்தைகளுக்கு தெரியாமலேயே போய்விடுவதுதான் .

"குழந்தைகளைக் கண்டிக்கிறோம்" என எல்லார் முன்பும் அவமானப்படுத்துவதைச் சில பெற்றோர் வழக்கமாக வைத்திருக்கிறார்கள். அதிகமாகக் கண்டிக்கவும், தண்டிக்கவும்படும் குழந்தை உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுவது கண்கூடு. மதிப்புடனும், மரியாதையுடனும் நடத்தப்படும் குழந்தை எதையும் சுலபமாகக் கற்றுக் கொள்கிறது. குழந்தை வளர்ப்பில் தாய், தந்தை இருவருக்குமே பங்கு இருப்பதே நன்மை. ஆனால் நம் சமூகத்தில் எல்லாப் பொறுப்பும் தாயின் தலையிலேயே கட்டப் படுகிறது. குழந்தையின் நடவடிக்கைகள் எதிர்மாறாக இருக்கும்போது நிச்சயம் தாய் தான் குற்றம் சாட்டப்படுகிறார்.

சரியான குழந்தை வளர்ப்பு என்பது அந்தந்தத் தருணங்களில் குழந்தைகளை மகிழ்ச்சிகரமாக உணரச் செய்வதே. நம் கடந்த கால ஆசைகள் மற்றும் எதிர்காலத் தேவைகள் போன்றவற்றை அவர்கள் மீது திணிப்பதை தவிர்த்து, அவர்கள் சொல்வதையும் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவர்கள் செய்யும் சிறு தவறுகளை மன்னிக்கக்

28 ஆம் பக்கம் பார்க்க...



# கடற்பெண்



கடலில் ஒரு துளியாக
கரைந்துவிடவே எண்ணினள்
கடல் ஆழத்துள்
அமிழ்ந்து திரிவதை விரும்பினள்

காலக்கடலினின்று
கட்டற்றுப் பயணிக்கும்
கன்னியென
அவள்,

யதார்த்த நிலத்திற்கும்
ஆசையின் கடலுக்கும்
இடையில் நடக்கும்
இப் போர் அவளுடையது

காலமா?
கணமா?
குணமா?

காதலில்
கலையில்
ஒரு கவிதையில்
அபாயகரமான
முடிவுகளை எடுக்க
என்னதான் வேண்டும்.

அவளே கடலாக?
அவளே காலமாக?



கவிதா லட்சுமி (நோர்வே)

# முடிந்தால் என் கழுத்துக்கு குறி வையுங்கள் இறக்கைகளுக்கு அல்ல!



மௌனத்தை
இன்னமும் முடித்துக்கொள்ளாத
ஒரு பறவையின்
வழமையான பறத்தல்
மீண்டும் ஆரம்பமாகிறது.
கண்ணிகளோடு காத்திருக்கும்
வேட்டையான்களுக்கு
தன் பறத்தலை
அறிவித்துக்கொண்டு
பறக்கத் தொடங்கும்
அதன் சிறகுகளுக்குள்,
இப்போது வீழ்ச்சி பற்றிய
அச்சம் எதுவும் இருப்பதாகத்
தெரியவில்லை.
மாசுபடாத வளிமண்டலம்,



சாம் பிரதீபன்
(இங்கிலாந்து)

வலிக்காத சிறகுகள்,
வழியறியும் கண்கள்,
பகை தாண்டும் வியூகம்,
இந்த சூட்சுமங்களோடு
விரிகிறது சிறகுகள்.

முடிந்தால்
என் கழுத்துக்கு குறி வையுங்கள்
இறக்கைகளுக்கு அல்ல.
மீளப்பெற முடியாத
இறக்கைகளின்
சொந்தக்காரன் என
நம்பிக்கொண்டிருப்பது
வேட்டையானின்
சின்னப்பிள்ளைத் தனம் என
சொன்னபடி பறக்கிறது
அந்தப் பறவை.
வேட்டையானிடம்
போதிய அம்புகள் இருக்கின்றனவா
என்பதுதான்
இப்போதைக்கு
என்னிடம் உள்ள கேள்வி.

# யேர்மனியில் பத்திரிகைத் துறையில் மிகவும் மதிப்புமிக்க Stern Award விருது

## துமிலன் செல்வகுமாரன் பெற்றார்

துமிலனுக்கு பத்திரிகைத் துறையில் மிகவும் மதிப்புமிக்க விருதுகளில் ஒன்றான Stern Award (Henri-Nannen Award) (12.06.2024) யேர்மனியின் Hamburg நகரில் வழங்கப்பட்டது.

காவற்துறையினரால் சாதாரணமரணம் என விடப்பட்ட மரணத்தின் தடயங்களை புலனாய்வு செய்து ஆராய்ந்து, அது தற்செயலான மரணம் அல்ல,அது தொடர் கொலையாளியால் செய்யப்பட்ட கொலை என நிரூபித்து, காவற்துறையினரின் அசிரத்தையை வெளிப்படுத்தி எழுதிய கட்டுரைக்காகவே இவவருடத்துக்கான இவ்விருது துமிலனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரிய விருது பெற்ற துமிலன் செல்வகுமாரன் அவர்களை வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது.






விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# சங்க இலக்கியத்தில் சாதிப் பிரச்சனை!



தினைப் புலத்திலே உயர்ந்த பரணில் இருந்து கொண்டு அவனை இன்று காணவில்லை என்றாள் அந்தப் பெண். பக்கத்தில் இருந்த தோழி சிரித்தாள். நாங்கள் இந்தத் தினைப்புலக் காவலுக்கு வந்த நாள் தொடங்கி அவனும் இந்த வழியால் தினமும் போகின்றான். நீயும் அவனை ஏக்கத்தோடு பார்க்கின்றாய். ஒரு நாளாவது நின்று எங்களுடன் ஒரு வார்த்தையாவது பேசியிருப்பானா அவன். தோழி மீண்டும் சிரித்தாள்.

அப்படியில்லை. பேச வேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் ஏதாவது பயமும் இருக்கலாம்.

என்ன பயம் பரணிலே இரண்டு பெண்கள் நாம். கீழே தினை வரம்பிலே கையில் வில்லுடன் அவன். வேறு யாரும் இல்லையே. பேசலாம். நிறைய ஆனால் எங்களைக் கண்டவுடன் தலையை மறுபக்கம் திருப்பிக் கொண்டு சென்றுவிடுகின்றானே ஏன். இது தோழி.

ஒரு வேளை எங்களை சாதி குறைந்தவர்கள் என்று நினைத்திருப்பானோ

அதிர்ந்து திரும்பினாள் தோழி. நீ என்ன சொல்கிறாய் என்றாள்.

நான் சொல்வது தான் உண்மை. மலைவாழ் குறவர்களாகிய எங்களுக்கும் காடுவாழ் வேடுவர்களுக்கும் சாதியிலே உயர்வு தாழ்வு இருந்தாலும் தோற்றத்தில் வேறுபாடு இல்லை அலங்காரத்தில் அதிக வேறுபாடு இல்லை அதனால் எங்களையும் தாழ்ந்த வேட்டுவ குடும்பம் என்று கருதி அவன் விலகிப் போயிருக்கலாம்.

சாதிப் பிரச்சனை எவ்வளவு பொல்லாதது பார்த்தாயா இப்போது அந்தப் பெண் கண்களிலே கண்ணீர்.

தோழி சொன்னாள் உச்சி வெய்யில் தணிந்து பொழுது இருட்டும் வேளையில் அதோ அவன் தாமதமாக வருகின்றான். இன்று நாங்களே அவனுடன் பேச்சுக் கொடுத்து நாங்கள் என்ன சாதி என்பதை அவனுக்குச் சொல்லி விடுவோம். நீ அழாதே.

அவன் அண்மையில் வந்ததும் பரணில் இருந்து இறங்கித் தோழியே முதலில் பேச்சுக் கொடுத்தாள். காட்டிலே கொம்பு எனப்படும் வாத்தியக் கருவியை ஒலித்து விலங்குகளைப் பயந்து கலைந்தோடச் செய்து கொடிய வாய்களை உடைய வேட்டை நாய்களை ஏவி அந்த மிருகங்களை வேட்டையாடும் இரக்கமற்ற வேட்டுவ குலத்துப் பெண்கள் அல்ல நாங்கள்.

மலைப்புறத்து வயல்களிலே தினையை விதைத்துப் பயிர் செய்து அறுவடை செய்து உண்டு உயிர்வாழும் குறவர் இனத்துப் பெண்கள் நாம். பொழுது சாய்ந்தால் காட்டு



மயில்கள் கூட்டம் கூட்டமாக வந்து எங்கள் பரண்களை தங்கள் வீடாக்கிக் கொண்டு தம் துணைகளுடன் இன்புறும். ஐந்து அறிவுச் சீவராசிகளான அவை எங்களைச் சாதி குறைந்தவர்களாக எண்ணிப் பரணைப் புறக்கணிப்பதில்லை. ஆனால் எல்லா அறிவும் நிரம்பப் பெற்ற மனிதர்கள் தான் தவறாக நடந்து கொள்கின்றார்கள் என்றாள் அவள்.

அங்கே மெதுவாக வந்த அந்தப் பெண் தோழிக்குச் சொன்னாள். நாங்கள் எது சொன்னாலும் அவர் நம்ப மாட்டாரடி. அவரை இன்று இப்படியே தனது சொந்த ஊருக்குப் போகாமல் எங்கள் மலைக் கிராமத்துக்கு வரச் சொல்லு. வளைந்த மூங்கில் குழாயில் அடைக்கப்பட்ட பழைய கள்ளை அங்கே வாங்கிக் குடித்துவிட்டு வேங்கை மரங்களின் கீழ் அமைந்த முற்றத்தில் நாங்கள் ஆடும் குரவைக் கூத்தையும் பார்த்துவிட்டு சொந்த ஊருக்குப் போகச் சொல்.

அப்போதாவது நாங்கள் என்ன சாதி என்பதைத் தெரிந்து கொண்டு எங்களுடன் பேசுகின்றாரா என்று பார்ப்போம் என்றாள் அந்தப் பெண்.

சங்கச் சமூகம் சாதி வரம்புகளுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்த இனம் என்ற கோட்பாட்டைச் சற்று அசைத்துப் பார்க்கும் இந்தப் பாடலைக் கபிலன் என்ற புலவன் நற்றிணையிலே 276 வது பாட்டாகப் பாடி வைத்திருக்கின்றான்.

**கோடு துவையா கோள்வாய் நாயொடு**
**காடு தேர்ந்து நசைஇய வயமான் வேட்டு**
**வயவர் மகளிர் என்றி ஆயின்**
**குறவர் மகளிரேம் குன்று**
**கெழு கொடிச்சியேம்**
**சேணோன் இழைத்த நெடுங்கால் கழுதில்**
**கான மஞ்ஞை கட்சி சேக்கும்**
**கல் அகத்தது எம் ஊரே செல்லாது**
**சேந்தனை சென்மதி நீயே பெருமலை**
**வாங்கு அமைப் பழுனிய நறவு உண்டு**
**வேங்கை முன்றில் குரவையும் கண்டே.**

கோடு துவையாக் கோள் வாய் நாயொடு காடு தேர் நசை இய வயமான் வேட்டு வயவர் மகளிர் என்றி ஆயின் – தலைவனே! கொம்பையூதி கௌவிக் கொல்லும் நாயோடு காட்டின் கண்ணே ஆராய்கின்ற விருப்பமுற்ற வலிய மானை வேட்டையாற் கொள்ளும் வேட்டுவ வீரரின் மகளிர் என எம்மைக் கூறுவீராயின் குறவர் மகளிரேம் குன்றுகெழு கொடிச்சியேம் – வேட்டுவ மகளிரல்லேம் யாம் குறமகளிரேம் மலையிலிருக்கிற கொடிச்சியரேம் சேணோன் இழைத்த நெடுங்கால் கழுதில் – தினை காவலன் கட்டிய நீண்டகாலையுடைய கட்டுப் பரணை் கான மஞ்ஞை கட்சி சேக்கும் – காட்டில் இருக்கின்ற மயில்கள் தாம் இருத்தற்குரிய பஞ்சரமாகக் கொண்டு அதன்கண்ணே தங்கா நிற்கும் எம் ஊர் கல்லகத்தது – எம்மூர் இம் மலையினகத்ததாயிராநின்றது் நீ செல்லாது சேந்தனை பெருமலை வாங்கு அமை பழுனிய நறவு உண்டு – ஆதலால், நீ இப்பொழுது நின்னூர்க்குச் செல்லாது எம்மூரை யடைந்து பெரிய மலையின் கண்ணே தோன்றி வளைந்த மூங்கிலாலாக்கிய குழாயில் நிரப்பி முற்ற வைத்த கள்ளைப் பருகி வேங்கை முன்றில் குரவையும் கண்டு செல் – வேங்கை மரத்தையுடைய முன்றிலிலே யாம் அயருங் குரவையையும் கண்டு மகிழ்ந்து பின் நாள் நின் ஊரை அடைவாயாக.

**(நன்றி.கனடா தமிழர் தகவல்)**









விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.





# கவிநாயகர் கந்தவனம் அவர்களின் நினைவேந்தல் விழா!

இரா.சம்பந்தன்
(கனடா)

கனடிய மண்ணிலே தன் வாழ்வில் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களைப் பொருட்படுத்தாது தமிழினத்து ஆடவரும் பெண்டிரும் சிறார்களும் மகிழ்வோடு வாழப் பாடுபட்ட ஒரு மனிதர் கவிநாயகர் வி.கந்தவனம் அவர்கள். தனது எழுத்தாலும் பேச்சாலும் சமயப் பணியாலும் கனடியத் தமிழுலகை மட்டுமல்ல பிற புலம்பெயர் தமிழ்த் தேசங்களையும் செழுமைப்படுத்தி மறைந்த அந்த மாமனிதனுக்கு 2.6.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்காபுரோவில் குரும்பசிட்டி நலன்புரி சபை ஒரு நினைவேந்தல் நிகழ்வினையும் தாய்வீடு பத்திரிகையில் தொடர்ச்சியாக கவிஞர் எழுதிவந்த இலக்கிய உறவுகள் என்ற நூல் வெளியீட்டினையும் ஒழுங்கு செய்து தனது நன்றியை அறிவித்துக் கொண்டது அவரின் துணைவி தவமணி குரும்பசிட்டியைச் சேர்ந்தவர் என்பதற்காக மட்டுமல்ல.

குரும்பசிட்டி நலன்புரி சபை நெல்லுக்கு இறைத்தநீர் வாய்கால் வழியோடிப் புல்லுக்குப் பொசிந்து விடாமல் மிகவும் கவனமாக நல்ல பல சேவைகளை ஆற்றக்கூடிய தொண்டர்களைத் தன்னகத்தே கொண்ட இயக்கம். அது நல்லவர்கள் என்று கைகாட்டியவர்கள் யாரும் தாழ்ந்து போனது கிடையாது. . அத்தகைய நடுநிலை வாய்ந்த அந்தச் சபை ஏகமனதாக எழுந்து நின்று கவிஞர் படத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தியது என்றால் கவிஞரின் பெருமை எவ்வளவு செறிவானது என்று புரிந்து கொள்ள முடியும்.





கடவுள் வாழ்த்தும் தமிழ்மொழி வாழ்த்தும் கவிஞர் மொழிபெயர்த்த கனடிய தேசிய கீதம் என்ற சம்பிரதாயங்களை சாக்சவி திலீபனை வைத்து முடித்துக் கொண்டு கணேஸ்வரி குகனேசன் அவர்களின் வரவேற்பு உரைக்கு வழி விட்டது நிகழ்ச்சி நிரல். அடுத்து குரும்பசிட்டி நலன்புரி சபையின் தற்போதைய தலைவரான ஐயாத்துரை ணஜகதீஸ்வரன் அவர்கள் தமது தலைமை உரையை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து நுணாவிலூர் சமூக செயற்பாட்டாளர் வி.எஸ். துரைராசா முன்னைநாள் குரும்பசிட்டி நலன்புரி சபைத் தலைவர் செ.அசோகமூர்த்தி சுகவீனம் காரணமாக சமூகமளிக்க முடியவில்லை என்ற காரணத்தால் முன்நாள் தலைவரான க.சிவதாசன் கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் முன்னைநாள் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் வீணை மைந்தன் சி.சண்முகரா எழுத்தாளர் இரா.சம்பந்தன் ஆகியோர் இரங்கல் உரைகளை ஆற்றினர்.

இலக்கிய உறவுகள் நூல் வெளியீட்டு நிகழ்வில் றொரன்ரோ பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சந்திரகாந்தன் பிரபல எழுத்தாளர் குரு.அரவிந்தன் குரும்பசிட்டி நலன்புரி சபை நிர்வாக உறுப்பினர் வாணி சிவராஜன் பொன்னையா விவேகானந்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.இறுதியாக தாய்வீடு பிரதம ஆசிரியர் பி.ஜே.டிலீப்குமார் அவர்கள் கவிநாயகரின் இலக்கிய உறவுகள் என்ற நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். பிரபல எழுத்தாளர் எஸ். ஜெகதீசன் அவர்கள் முதல்பிரதியைப் பெற்றுக்கொள்ள அதனைத் தொடர்ந்து சபையோர் நீண்ட வரிசையில் நின்று நூலைப் பெற்றுக் கொண்டணர்.



விழாவிலே கவிஞரின் பிள்ளைகளான கந்த வாரணனும் வாணியும் துணைவியார் தவமணியும் மற்றும் குடும்ப உறவினர்களும் குரும்பசிட்டி நலன்புரிச் சபை உறுப்பினர்கயோடு இணைந்து வருகை தந்தோர் அனைவரையும் அனைவரையும் வரவேற்று அமரவைத்து உபசரித்த பாங்கானது பிறருக்கு அன்பும் மரியாதையும் காட்டுவதில் அப்பாவுக்கு நாங்கள் குறைந்தவர்கள் அல்ல என்று சொல்வதைப் போல இருந்தது.

மாறுபட்ட கொள்கைகள் வேறுபட்ட தளங்கள் என்று பிரிந்து நின்று கனடாவில் எழுத்துப்பணி பொதுப்பணி செய்துவரும் பலரை குரும்பசிட்டி நலன்புரி சங்கமும் கவிநாயகர் குடும்பமும் இரு கரைகளைகளாக நின்று கொண்டு அன்றைய தினம் தங்களின் நடுவே நதியாகக் இணைந்து நடக்கச் செய்த இந்த விழாவும்; இலக்கிய உறவுகள் என்ற தூல் வெளியீடும் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் இலக்கிய வாழ்வுக்கு மற்றுமொரு சான்றாக என்றும் நிலைத்திருக்கும்.

மன்னா உலகத்து
மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறுவித் தாம் மாயந்தனரே!

டொட்மண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும்
யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்



# தவிர்க்க முடியாதா? மாதவிடாய் நிற்கும் காலத்தின் எடை அதிகரிப்பு?


"உங்கடை நிறை கூடிக்கொண்டு போகுது. அதைக் குறைக்க வேண்டும்" என்றேன். "உங்களுக்குத் தெரியும்தானே டொக்டர். எனக்கு இந்த பீரியட் நிண்டாப் போலைதான் உடம்பு போட்டுட்டுது" என்றார். அது ஏற்கனவே எனக்குத் தெரிந்ததுதான். குடும்ப மருத்துவர்களுக்கு இத்தகைய விடயங்களைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அது தெரிந்திருந்தும் அவரது எடையக் குறைப்பது அவசியம் என்பதை உணர்ந்ததாலேயே எடை குறைப்பு பற்றிப் பிரஸ்தாபித்தேன்.

அவர் சொன்னதிலும் உண்மை உள்ளதுதான். ஆனால் மாற்ற முடியாதது அல்ல.

பெரும்பாலன பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலங்களிலும் அதைத் தொடர்ந்து மாதவிடாய் முற்றாக நின்ற பின்னரும் எடை அதிகரிக்கவே செய்கிறது. இடை அழகியாக இருந்தவர்கள் சள்ளை தொங்கும் குண்டுப் பீப்பாய்களாக மாறுவார்கள். இடுப்பில் மட்டுமின்றி வயிறும் பெரிதாகும். அன்ன நடை நடந்த பெண்கள் ஆயாச நடையில் அரங்கி அரங்கி நடப்பார்கள்.

## இது உங்களுக்கும் வரவேண்டுமா?

மாதவிடாய் பொதுவாக 50ற்கு சற்றுப் முன் பின்னராக நின்று போகிறது. 50 முதல் 59 வயதுவரையான பெண்களில் 30 சதவிகிதமானவர்களின் எடை அதிகரிக்கிறது. சாதாரணமான அதிகரிப்பு உள்ளவர்களாக (Over Wight) மட்டுமின்றி அதீத எடை (Obesity) உள்ளவர்களாகவும் அவ் வயதுப் பெண்கள் மாறுவது அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறாயின் மாதவிடாய் நின்ற பெண்களில் எடை அதிகரிப்பது நியதியா என்று கேட்டால். இல்லை என்றே சொல்லலாம். போஷாக்கான உணவு முறைகளையும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கடைப்பிடித்தால் அந்நேரத்திலும் எடை அதிகரிப்பைத் தடுக்க முடியும்.




டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்


## ஏன் அதிகரிக்கிறது

மாதவிடாய் நிற்கும் போது பெண்களில் உடலிலுள்ள பெண் ஹோர்மோனான ஈஸ்ரோஜன் அளவுகளில் வீழ்ச்சி ஏற்படுகிறது. இந்த மாற்றமானது உடலின் இயக்கத்தின் வேகத்தைக் குறைத்து சோம்பலைக் கொண்டு வருவவதுடன் அதிகமாக உண்ணவும் வைக்கிறது என எலிகளில செய்யப்பட்ட ஆய்வு ஒன்று கூறுகிறது. இது பெண்களுக்கும் ஏற்புடையதாக இருக்கலாம். அதேபோல ஈஸ்ரோஜன் அளவு குறையும்போது உடலின் வளர்சிதை மாற்ற விகிதம்; (metabolic rate) தாழ்ச்சியுறுகிறதாம். மாதவிடாய் நின்ற பெண்களின் சில பிரச்சனைகளுக்காக ஈஸ்ரோஜன் மாத்திரைகளை மருந்தாகக் கொடுக்கும்போது அவர்களது உடலின் வளர்சிதை மாற்ற விகிதம் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அத்தகைய ஹோர்மோன் மாற்றம் ஏற்படும்போது உடலானது மாப்பொருளையும் குளுக்கோசையும் பயன்படுத்தும் ஆற்றல் குறைகிறது. இதனால் அவை உடலில் கொழுப்பாக சேமிக்கப்பட்டு உடை அதிகரிக்கிறது என்கிறார்கள். மாதவிடாய் நிற்கும் கால எடை அதிகரிப்பிற்கு ஹோர்மோன் மாற்றங்கள் ஒரு காரணமாகச் சொல்லப்பட்டபோதும் அது தவிர்ந்த வேறு பல காரணங்களும் இருக்கின்றன. வயதாகும்போது உடல் உழைப்புச் செயற்பாட்டிலும் வாழ்க்கை முறையிலும் ஏற்படும் மாற்றங்கள் முக்கியமானவை.

உதாரணமாக வயசாகும்போது தசைகளின் திணிவு குறைகிறது. அதே நேரம் அதிலுள்ள கொழுப்பின் அளவு அதிகரிக்கிறது. தசைத் திணிவு குறையும்போது அவற்றால் முன்னரைப் போல கலோரிச் சத்தை பயன்படுத்த முடிவதில்லை. ஆனால் இவை தவிர்க்க முடியாத விடயங்கள் அல்ல. உட்கொள்ளும் உணவைச் சற்றுக் குறைத்து உடற் செயற்பாட்டை அதிகரிப்பதன் மூலம் எடை ஏறுவதை நிச்சயமாக் குறைத்துக் கொள்ள முடியும்.

வேறு வார்த்தைகளில் சொல்லவதானால் இள வயதில் உட்கொண்டது போன்ற அளவுகளில் உணவுகளைத் தொடர்ந்து உட்கொண்டபடி உடலுக்கு போதியளவு வேலையைக் கொடுக்கவிட்டால் எடை அதிகரிக்கவே செய்யும்.

பரம்பரை அம்சங்களும் அந்நேர எடை அதிகரிப்பிறகு காரணமாகலாம். உதாரணமாக உங்கள் அம்மா அல்லது அப்பா தொந்தியும் சள்ளையுமான கொண்ட பருத்த உடல்வாகு உள்ளவரானால் நீங்களும் அவ்வாறு ஆவதற்கான சாத்தியம் அதிகமே.

மன உழைச்சல்களும் காரணமாகலாம். அந்த வயதில் பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிய நேரலாம், கணவன் மரணமடையலாம், மணமுறிவு ஏற்படலாம். இத்தகைய சம்பவங்களால் மன உழைச்சல்கள் ஏற்படலாம். அதன் காரணமாக ஒருவர் தனது உணவு முறையில் அக்கறை செலுத்தாது விடுவவார்கள். மனம் தளர்ந்து சுறுசுறுப்பாக இயங்காது சோர்ந்து கிடக்கவும் செய்வர். இவற்றால் எடை அதிகரிக்கும். 60 சதவிகிதமானவர்கள் தங்கள் முதுமையில் போதுமான உடற்பயிற்சி செய்வதில்லை என அறிக்கைகள் கூறுகின்றன. தொடர்ந்து வயது அதிகரிக்கும்போது உடல் இயக்கத்தில் குறைபாடும் அதிகரிக்கிறது. இதைத் தவிர்த்து உள பூர்வமாக உடற் பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

## எடை அதிகரிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் எவை

உடல் எடையானது தேவைக்கு அதிகமாக அதிகரிக்கும் போது உடலில் பல்வேறு சிக்கல்களும் நோய்களும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. பிரஸர் அதிகரிக்கும்,நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியம் அதிகமாகும்.மாரடைப்பு நோய்க்கான சாத்தியமும் அதிகமாகும். அதைபோல மூட்டு வருத்தங்களுக்கான சாத்தியம் அதிகரிக்கும். குண்டான பலர் முழங்கால் மூட்டில் தேய்வு வீக்கம் என அவதிப்படுவதை நீங்களே அவதானித்திருப்பீர்கள்.

எடை அதிகரிப்பானது கொழுப்பு அதிகரிப்பதோடு தொடர்புடையதுதானே. இந்த கொழுப்பானது வயிற்றறைப் பகுதியில் அதிகமாகவே சேரும். அதனால் வயிறு பானைபோலாகும். வயிற்றறைச் சுற்றளவானது 35 அங்குலத்திற்கு அதிகமானால் அது மேலே கூறியது போன்ற பலவித ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்பது தெரிந்ததே. எனவே அதைத் தவிர்க்க வேண்டும்.

18 ஆம் பக்கம் பார்க்க...





நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்
Jaffna Bazar Jewellery
தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்
2024ம் ஆண்டின் புதிய வரவு! புத்தம் புது அழகிய டிசைன்களில் தங்க நகைகள்
பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்
திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.
Branch:
Jaffna basar.
Taunus Str 31,
60329 Frankfurt Main
உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்
ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு
பசுமையான மரக்கறி வகைகள் கடல் உணவு வகைகள் அனைத்தும் எம்மிடம் தரமாக மலிவாகக்கிடைக்கும்
KADHIR
Lalla
Basmati Rice
Jaffna Bazar
Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main
Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

# 'சூரரைப் போற்று'

கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)



குரு பேராசிரியர் பத்மபூஷன் சந்திர சேகர் ஐயாவின் 85 ஆவது பிறந்த தினம் அன்று ஆரம்பிக்கப்பட்ட உலக இலங்கை பரதநாட்டியக் கலைஞர்கள் சங்கத்தின் நான் காவது நிறைவு விழா பிரம்ம கமலம் 2024, 22.05.2024 அன்று இணைய வழியினூ டாக நடைபெற்றது.

இச் சங்கத்தின் வருடாந்த ஆண்டு நிறை வானது கலைத்துறையில் மிகச் சிறந்த சேவையாற்றிய மகா குருமாரை வணங்கி கௌரவிக்கும் நிகழ்வாக அமைந்து வருகி றது. அந்த வகையில் முதலாம் வருடம் பத்மபூஷன் குரு சந்திரசேகர் அவர்களு க்கும், இரண்டாம் வருடம் பத்மஶ்ரீ குரு அடையார் லக்ஷ்மணன் அவர்களுக்கும், மூன்றாம் வருடம் பத்மபூஷன் குரு தன ஞ்சயன் , சாந்தா தனஞ்சயன் அவர்களு க்கும் கௌரவித்து விழா நடாத்தினோம். இந்த வருடம் நான்காம் ஆண்டு சிறப்பு நிகழ்வாக அண்மையில் இந்திய உயர் விருது பெற்ற "பத்மவிபூஷன்" குரு பத்மா சுப்பிரமணியம் அவர்களுக்காக அமைந் திருந்தது.

பூரண பதுமத்தின் பெரும் பெயர் பொழிய, மொழிந்திட இயலா ஆடல் இறைவியைத் தரிசிக்கும் நற்பேறு இன் றைய தலைமுறையினருக்கு நல்கிடும் வகை யில் அமையப்பெற்ற பிரம்ம கமலம் 2024 நிகழ்வில் " பத்மவிபூஷன் " முனைவர் பத்மா சுப்ரமணியம் அம்மா அவர்களைக் கண்டு , அவர்களின் மந்திரச் சொற் களைக் கேட்டு வாழ்த்திப் பணிந்து களி கொண்டோம்.

இந்த நிகழ்வு இரு பிரிவுகளாக வகுக்கப் பட்டிருந்தது. ஒன்று பத்மா சுப்பிரமணியம் அம்மாவின் இலங்கை விஜயங்கள் பற்றி யதாகவும், இரண்டாவது அவரிடம் பயின்ற இலங்கை மாணவிகளின் கருத்துப் பகிர்வா கவும் அமைந்திருந்தது.

இலங்கையில் கொழும்பு கம்பன் கழகத் தின் அழைப்பில் வருகை தரும் போது " கம்பன் புகழ் " உயர் விருதளித்து மகி ழ்ந்த அகில இலங்கை கம்பன் கழக அமைப் பாளர் " கம்பவாரிதி " ஜெயராஜ் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். அதில் ராமாயணத்திற்கு பலர் விளக்கவுரை வழங்கி இருந்தாலும் நாட்டிய உரை எழுதிய பெருமை பத்மா அம்மாவையே சாரும் என்று வாழ்த்திப் பணிந்தார்.

இலங்கையில் பத்மா சுப்பிரமணியம் கலந்து சிறப்பித்த மற்றுமொரு முக்கிய நிக ழ்வாக நாட்டியமயில் போட்டி நிகழ்வினைக் குறிப்பிடலாம். ஒருமுறை யாழ்ப்பாணத் திலும், ஒரு முறை கொழும்பிலும் இந்நிக ழ்விற்கான அவர் வருகை இருந்தது. அச்சமயம் அகில இலங்கை ரீதியில் உள்ள நடன ஆசிரியர்களுக்கு கொழும்பில் பயி ற்சிப் பட்டறை நடாத்தி தனது நேரடிப் பார் வையில் சிறந்த நடனக் கலைஞரைத் தெரிவு செய்து " அகில உலக பத்மா சுப்பிர மணியம் " விருது வழங்கி கௌரவித்தார். இவ்விருதினை பெற்றுக்கொள்ளும் பெரும் பேறினை இறையருளால் அம்மாவின் கரம் தொட்டு பெற்றுக்கொண்ட நெகிழ்வினை இன்னும் எண்ணி வியக்கிறேன்

யாழ்ப்பாணத்தில் இவ்விருதினைப் பெற்று முனைவர் பட்டத்தினை பத்மா அம்மா வழிகாட்டலில் நிறைவேற்றிய யாழ் பல்கலைக்கழக மேனாள் நடனத் துறைத் தலைவர் முனைவர் அருட்செல்வி கிருபைராஜா அவர்களும் , டென்மார்க் கீதாலயா இயக்குனர் திருமதி கிரிஷ்ணப்ரியா சத்தியமூர்த்தி கோபி நேசன் அவர்களும் பத்மா சுப்பிரமணியம் அவர்களின் கற்பித் தல் பற்றி அறியத் தந்தார்கள். இலங்கைக் கலைஞர்களான சிங்கப்பூர் அப்சராஸ் கலையக கலை இயக்குனர் திரு அரவிந் குமாரசுவாமி, படைப்பாக்க இயக்குனர் திரு மோகனப்ரியன் தவராஜா ஆகியோர் பத்மா அம்மா அவர்களிடம் பணி புரிந்த அனுபவ த்தினையும், அவரது ஆய்வின் செறிவினை யும் தமது உரையில் முன் வைத்தனர்.

பத்மா சுப்பிரமணியம் அவர்களின் குடும்பத்தினர் நிருத்யோதயா செயலாளர் திரு கண்ணன் பாலகிருஷ்ணன் , அதிபர் முனைவர் காயத்ரி கண்ணன் , நடன ஆசி ரியர் திருமதி மகதி கண்ணன் ஆகியோர் பத்மா அம்மாவுடன் இருப்பதைத் தம் பிறவிப் பயன் என்று கூறிக் கண்ணீர் மல்கி உரையாடினர்.




நிகழ்வின் நிறைவில் இருபது நிமிட உரையினை வழங்கி அனைத்துக் கலைஞ ர்களுக்கும் வாழ்த்துக்களையும் ஆசிக ளையும் தெரிவித்தார் பத்மா சுப்ரமணி யம். அத்தோடு அடுத்த ஆண்டு நிகழ்வு சென்னையிலும், இலங்கையிலுமாக நேர டியாக அமைக்க வேண்டும். இலங்கை இந்திய கலைஞர்கள் அனைவரும் ஒன்று திரண்டு கொண்டாட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சங்கத்தின் செயலாளர் நிறைஞ்சனா சுரேஷ் அவர்கள் லண்டனில் இருந்து இணைந்து கொண்டு, இந்த நிகழ்வினை சிறப்பிக்க வருகை தந்த கலைஞர்களுக்கும், பதினேழு நாடுகளுக்கும் மேற்பட்ட இடங்க ளில் இருந்து இணைந்திருந்த சங்கத்தின் அங்கத்துவ கலைஞர்களுக்கும், நிகழ்வி ற்கான அனுசரணை வழங்கிய கீதாலயம் டென்மார்க் நடனப்பள்ளிக்கும், ஊடக அனுசரணை வழங்கியோர்க்கும் நன்றி களைத் தெரிவித்தார்.

தொடக்கவுரை ஆற்றிய பேராசிரியர் முனைவர் மௌனகுரு அவர்கள் "உடலால் வெளியில் ஓவியம் வரைபவள் " என்று பத்மா சுப்பிரமணியத்தை பற்றிய கவிதை படித்து , அவருடனான தன் உறவை சொல்லி வாழ் த்தியதோடு, குருவை அதி உயர்ந்த இடத்தில் போற்றும் பண்பாடு மிக்க இந்த சங்கத்தை மனதார வாழ்த்துவதாகத் தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் இருக்கின்ற இலங்கைக் கலைஞர்கள் ஒன்றாக செயற்படுவது என்பது மிகவும் முக்கிய மான விடயம். நூற்றுக்கும் மேற்பட்ட நிக ழ்வுகளை நடத்தியதோடு , அறுபது நடன ஆசிரியர்களை நேர்கண்டு ஆவணப்படுத்தி யுள்ளது . இந்த சங்கத்தின் செயல்பாடுகள் தொடர்ந்து வளர வேண்டும் என்று நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வருகை தந்த இலங்கை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு அநி ருத்தன் அவர்கள் உரையாற்றினார். இந் திய- இலங்கை கலை உறவின் பாலமாக செயற்படும் இந்த சங்கத்தினை பாராட்டுகி றேன். கலைஞர்கள் மட்டுமல்ல , கலை வடிவங்களும் சங்கமிக்க வேண்டும் என்று முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இந்திய உயர்ஸ்தானிகராலயம் சுவாமி விவேகானந்த கலாசார மையத்தின் பணி ப்பாளர் பேராசிரியர் முனைவர் அங்குரான் தத்தா அவரகள் தெரிவித்தார். இந்த நிகழ் வில் இந்தியாவில் இருந்து கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் நிறுவன செயலாளர் திரு சேகர் அவர்களும், பாரத் காலாச்சார் கலாசார ஆலோசகர் லு.பு மதுவந்தி அவர்களும் சிறப்பு அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். பத்மா சுப்ரமணியம் அவர்களின் மனித நேயம் பற்றி மதுவந்தி அவர்கள் தெரிவி க்க , அவரது இசை நுட்பம் பற்றி சிரேஷ்ட மாணவி முனைவர் ஜெயஸ்ரீ ராஜகே ாபாலன் அவர்கள் மும்பையில் இருந் தும் அவர் புதல்வி வைஷ்ணவி ஆனந்த் அவர்கள் சிங்கப்பூரில் இருந்தும் கலந்து பகிர்ந்து கொண்டார்கள்.

பத்மா சுப்பிரமணியம் அவர்களின் ஆடல், இசை நுட்பம், ஆய்வு, நாட்டிய சாஸ்திர கர்ணங்களில் அவரது பங்களிப்பு என பல கோணங்களில் கலந்துரையாட ப்பட்ட ப்ரம்மகமலம் 2024 நிகழ்வு கௌரவ நிகழ்வாக மட்டும் இல்லாமல் அறிவு சார்ந்த அனுபவ நிகழ்வாகவும் அமைந்தது.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# நோர்வேஜிய மொழிவிருது பெற்றார் ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஜோகான் சண்முகரத்தினம்!

'வாசகர்களை ஈர்க்கின்ற செழுமையான ஊடகமொழி கைவரப்பெற்றவர் ஜொகான். நகைச்சுவை, அறிவார்ந்த பார்வை, மற்றும் நேர்த்தியான ஊடகமொழி மூலம் வியத்தகு ஆற்றலுடன் வாசகர்களை ஈர்க்கின்றார். அவர் தனது எழுத்துகளிற் கையாளும் பேசுபொருட்களின் பரப்புப் பெரியது, ஆனால் எப்போதும் காலப பொருத்தமுடையவை. இந்த வெற்றியாளர் நோர்வேஜிய பத்திரிகைப் பரப்பினை விரிவுபடுத்தத் துணைநிற்கின்றார். அந்தப் பரப்பினை நகைச்சுவை, அறிவு, புதிய நுண்ணறிதல், திடமான ஊடக மொழி ஆகியவற்றால் நிரப்புகிறார்' என வர்ணித்துள்ளது (01.05.24) விருதுத் தெரிவிற் பணியாற்றிய நடுவர் குழு.

ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ஜொகான் சண்முகரத்தினம் அவர்களுக்கு நோர்வேயின் முதன்மைச் செய்தி நிறுவனமான NTB இன் (Norsk Telegrambyrå /The Norwegian News Agency) 2023ஆம் ஆண்டுக்கான 'மொழி விருது' வழங்கப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டிலிருந்து NTB இந்த மொழி விருதினை ஒவ்வோராண்டும் வழங்கி வருகின்றது. நோர்வேஜிய மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராத ஒருவர் முதன்முறையாக இவ்விருதிற்குத் தெரிவாகியுள்ளமை தனித்துவமான அம்சமாகுகின்றது. நோர்வேயின் பர்கன் (Bergen) நகரில் இடம்பெற்ற 'நோர்டிக் ஊடக நாட்கள் - The Nordic Media Days' நிகழ்வின் போது (மே 2ஆம் திகதி) விருது வழங்கப்பட்டுள்ளது.



'வாசகர்களை ஈர்க்கின்ற செழுமையான ஊடகமொழி கைவரப்பெற்றவர் ஜொகான்' என வர்ணித்துள்ளது விருதுத் தெரிவிற் பணியாற்றிய நடுவர் குழு.

நோர்வேஜிய ஊடக-இலக்கியப் பரப்பில் ஜொகானுக்குக் கிடைத்திருக்கும் இரண்டாவது விருது இதுவாகும். கடந்த 2022இல் இவருடைய இரண்டாவது புத்தகத்திற்கு (Bruddet) நோர்வேயின் புத்தக வணிகக் கூட்டமைப்பின் (Norwegian Book store assosiation) விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 2007ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் நோர்வேயின் ஊடக எழுத்தாளர்களில் ஒருவரைத் தனியான நடுவர் குழு மூலம் தேர்வு செய்து மொழிவிருதினை வேடீ வழங்கி வருகின்றது. குறித்த ஆண்டு முழுவதும் சிறந்த எழுத்துவடிவ செய்திமொழியில் ஆளுமையை வெளிப்படுத்தும் ஊடகத்துறை ஆளுமைக்கான விருது இதுவாகும்.


ஜொகான் 1985இல் தனது 6வது வயதில் பெற்றோர் மற்றும் இவரிலும் 4 வயது மூத்தவரான சகோதரருடன் நோர்வேக்குப் புலம்பெயர்ந்தவர். இவரது தந்தை ஈழத்



தமிழர். அவர் நம்மத்தியில் வாழும் சிந்தனையாளரும் விமர்சகருமான பேராசிரியர் ந.சண்முகரத்தினம் ஆவர். தாயார் ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர் (Mikuko Kitayama). ஜொகான் ஈழத்தில் பிறந்து தனது மூன்று வயதுவரை அங்கு வாழ்ந்து – பின்னர் தனது தாயாரின் தாயகமான ஜப்பானில் ஆறு வயது வரை வாழ்ந்தவர். 1985இல் குடும்பத்துடன் நோர்வேக்குப் புலம்பெயர்ந்தவர்.

ஜொகான் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் சமூகப் புவியியல் துறையில் பயின்றவர். 2003ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை நோர்வேயின் 'கிளஸ்சக்கம்பன்' (Klassekampen/Class Struggle) நாளிதழில் ஊடகவியலாளராப் பணியாற்றி வருகின்றார். 2011 – 2017 காலப்பகுதியில் அவ்விதழின் சர்வதேசச் செய்திகள், கட்டுரைகளுக்கான பிரிவின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர்.

நாளாந்தம் பத்திரிகைக் கட்டுரைகளுக்கு அப்பால் நோர்வேஜிய மொழியில் இதுவரை மூன்று நூல்களையும் எழுதியுள்ளார். 'Vi puster fortsatt' (நாம் இன்னும் சுவாசிக்கின்றோம்), 'Bruddet – Byen som ville ha brexit' (உடைவு- வெளியேற்றத்தை விரும்பிய நகரம்), 'Hjertet i to: Seks måneder med Karpe' (இதயம் இரண்டாக: கார்பேயுடன் ஆறு மாதங்கள்) ஆகியன அவர் எழுதிய நூல்களாகும். இவருடைய நூல்கள் இனவாதம், அடையாளம், இணைவாக்கம், அந்நியப்படுத்தல் ஆகிய பேசுபொருட்களை உள்ளடக்கிய கதையாடல்கள். மூன்று நூல்களும் நோர்வேஜிய ஊடக, இலக்கிய, வாசகர் மட்டங்களிற் பரவலாக அறியப்பட்டவை.



**லூபன் சிவராஜா (நோர்வே)**


# 'வெற்றி நிலா முற்றம்'

## வெற்றிமணி 30 ஆம் ஆண்டு நிறைவு விழா

**எதிர்வரும் ஆடி மாதம் 06.07.2024 இல் பருத்தித்துறை நகரில் இடம் பெற உள்ளது.**

**இடம். ராஜாராணி மண்டபம்**
**(Raja Rani Centre 4th Cross Street Point Pedro)**
**நேரம் மாலை 3.00 மணி முதல் 6.30 மணி வரை.**



மேற்படி விழா ஊடகவியலாளர் பாரதி இராசநாயகம் அவர்களின் தலைமையில் இடம் பெற உள்ளது.

வரவேற்புரை: வெற்றிமணி ஆசிரியர்
**மு.க.சு.சிவகுமாரன்**

சிறப்புரைகள்.
னுச. கே. முருகானந்தன்
எழுத்தாளர் திருமதி. கோகிலா மகேந்திரன்
வலன்ரீனா இளங்கோவன் (முன்னாள் யாழ் வெற்றிமணி ஆசிரியர்)
கவிஞர் வ. வடிவழகையன்.
கவிஞர் த.ஐங்கரன்

நிகழ்ச்சிகள்:

வெற்றிமணி பத்திரிகை இதழ் பற்றிய கருத்துரைகள்.

"வெற்றிமணியும் யேர்மனியும் 30 வருட அனுபவப்பகிர்வு"

திரு. மு. க. சு. சிவகுமாரன் வெற்றிமணி பிரதம ஆசிரியர் யேர்மனி

வைகல் நூல் அறிமுகம் (வெற்றிமணி வெளியீடு-28)

குறும்படங்கள்.
"எழுதாத கவிதைக்கு முதல் பரிசு " (பருத்தித்துறையில் படமாக்கப்பட்டது)
"தம்பட்டம்" (யேர்மனியில் படமாக்கப்பட்டது)



பிரதம விருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

நன்றியுரை: யோ. சாந்தி
[விழா ஏற்பாட்டாளர், வெற்றிமணி சர்வதேச பரப்பு செயற்பாட்டாளர்]

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

# ஊகங்களால் தப்பிக்கக் காரணம் தேடிக் கொண்டு உண்மையிடம் பலியாகிக் கொண்டிருக்கிறோம்

**இது இப்படித்தான் எம்மைத் துரத்துகிறது**

வெளியே மழை கொட்டிக் கொண் டிருந்தது. வாசலில் காரை நிறுத்தி, காருக்குள்ளிருந்து, இன்று உனக்கு ஒரு அலுவலும் இல்லைத் தானே வா வெளியே போய் வரலாம் எனத் தகவல் அனுப்பினாள்.

மழை கொட்டுகிறது இதற்குள் எங்கே வெளியே. உள்ளே வா என பதில் அனுப்பி னேன். மழைக்குள் வெளியே போகாத ஆள் தானே நீ. நடிக்காமல் வா என்றாள்.

அடைமழையில் தாரில்லா சாலையில் காரை நிறுத்திப் பேசிக்கொண்டிருப்பது சுகம் பலமுறை பேசியிருக் கிறோம்.

இரண்டு கப்கள் மூடிய சுடுதண்ணிப் போத்திலுக்குள் கோப்பியுடன் போய் காரில் ஏறினேன். மோட்டாரை இயக்கினாள். கொப்பியைப் பார்த்து இது எதற்கு. கோப்பி குடிக்கத்தான் போகிறோம் என்றாள். முறை த்தேன்.

காரை, இயற்கைப் பூங்காவும் செயற்கைக் காடும் அமைந்த இடத்தில் நிறுத்தினாள். அங்கே இருக்கும் காப்பிக் கடைக்கு நிலத் துக்குச் சீமெந்து இருக்காது சுவர்கள் இருக்காது நான்கு பக்கமும் மரத்தூண் நாட்டி மேலே மூடியிருப்பார்கள்.

முன்னே ஒரு நீர் நிலையும் சூழக் காடும் இருக்கும். சூடான காப்பியைப் பருகிக் கொண்டே, நீர்நிலைக்குள் விழும் மழைத் துளிகளை ரசித்துக் கொண்டு மெல்லிய குளிர் உடலை வருட அமர்ந்திருப்பது சொர்க்கம். அமர்ந்தோம் காப்பி வந்தது.

எனக்கென விலை கூடிய ஆசைகள் எதுவுமில்லை, ஊரோய்ந்த நேரத்தில் நிலாக்கால இரவில் நடக்க வேண்டும், ஜன்னல் கரையில் அமர்ந்து மழை ரசிக்க வேண்டும், ஏதாவது ஒரு குளக்கரையில் அமர்ந்து கொண்டு நீருக்குள் மழை விழும் அழகைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்.

ஆனாலும் காலம் அவைகளை என் வாழ்வில் விலைமதிப்பானவையாக்கி விட்டது. தாத்தா இறந்த பின் இரவில் நடக்க வாய்க்கவில்லை. இங்கு வந்த பின் எதுவுமே......

வாழ்வின் விலைமதிக்க முடியா விடயமே அது தான் மாலினி. விரும்பினவைகளை



ரசித்து வாழத்தெரியாதவர்களுடன் காலங் கழிக்க நிர்ப்பந்தமாவது என்றவள் பின்வந்த ஒரு பிறந்தநாளில், மாலை உன் குடும்பத் துடன் கொண்டாடிக் கொள் இப்போது என்னுடன் வா என கட்டாயப்படுத்தி அழைத்துப் போய் அமர்த்திய இடம் இது.

பின் பல மழைகளை இகோப்பிக்கடை யில் இருந்து மணிக்கணக்காக ரசித்திருக் கிறோம் வழமையை விட நீண்ட நேரம் சிரிக்கச் சிரிக்கப் பேசினாள். முகத்தில் நிறையச் சோர்விருந்தது. இயல்பிலேயே இரத்தச் சோகை கொண்டவள் அரைவருட த்துக்கு ஒரு முறை உடலில் இரும்புச் சத்து ஏற்றிக் கொள்பவள்.



**மாலினி மாலா**
**(யேர்மனி)**

பீரியட்ஸ் நாளில், மற்றப் பெண்களை விட அதிக சோர்வும் உதடு வெடிப்பும் முக வெளிறலும் அவளிடம் அதிகமாக இருக்கும் ஆதலால் இன்றும் அந்த நாட்களில் ஒரு நாளாக இருக்கலாம் என எண்ணிக் கொண்டேன்.

நிறைய நேரம் கதைத்து வழமையை விட ஏராளமாய் சிரிப்புக் கதைகள் சொல்லி. பலமுறை எனக்கும் அவளுக்கும் வந்த சண்டைகளும் பின் ஆளுக்காள் தன் னிலை விளக்கம் கொடுத்து ஒன்றுமே இல்லாத துக்கு புரிதலற்றுச் சண்டையிட்ட முட்டாள்தனங்கள் எல்லாம் சொல்லிச் சிரி த்த பின் சொன்னாள்

இப்போது சொல்லப் போவதைக் கேட்டு அதிராதே. அழாதே. என எனக்கு மனது அதிர்ந்தது. பீடிகை அவளது வழக்கமல்ல.

என் கர்ப்பப்பை வெளியே எடுக்க வேண்டும் என்றாள் இறுகிய குரலில். மாதாமாதம் அதிக இரத்தப் போக்காக இருக்கிறது என சில மாதங்களின் முன் சொல்லியிருந்தாள். அதனாலா என நான் கேட்பதற்கு முன்பே, மூன்றாம் படிநிலை யையும் கடந்து விட்டேன் போன வருடத் தைய உடற்பரிசோதனையின் போது எதுவு மேயில்லை. பதினொரு மாதங்களில் வேகவளர்ச்சி கொண்டு பக்க உறுப்புக ளிலும் பரவியிருக்கிறது.

இம்மாதம், இரு முறை வந்தது. இருமுறை யும் பைப் திறந்து விட்டமாதிரி இரத்தம் ஓடத் தொடங்கியது.

முதலில் போனமாதங்கள் எண்ணியது போல மாதவிலக்கு நிற்கும் காலம் வருகி றது சிலருக்கு அப் போதும் அதிக இரத்தப் போக்கிருக்கும் என்பார்கள் அதனால் தான் என நினைத்தேன். ஆனால் கணவன் வலுக்கட்டாயமாக வைத்தியசாலையில் ஒப்படைத்தபின் தான் கண்டு பிடித்திருக்கி றார்கள். அப்போ போன வாரம் நீ சுகயீன விடுப்பெடுத்தது இரும்புச்சத்து ஏற்றிக் கொள்வதற்காக இல்லையா.

இல்லை வைத்தியர்களின் சந்தேகம் ஊர்ஜிதமாகட்டும் என உனக்குச் சொல் லாமல் இருந்தேன். நேற்றுக் கூப்பிட்டு விளங்கவைத்தார்கள். திங்கட்கிழமை அட்மிட் ஆகிறேன் செவ்வாய் அறுவை செய்வார்கள்.

பின் பேச இருவருக்கும் எதுவுமிருக்க வில்லை. குணமாக்குதல் பற்றி உறுதியாக ஒன்றும் சொல்லவில்லை. முயற்சிப்போம் என்று தான் சொல்லியிருக் கிறார்கள்.

அழக்கூடாது என்றாலும் அழுகை வந்தது கோபம் வந்தது.

முட்டாள் அதிக இரத்தப் போக்கான போதெல்லாம் எத்தனை தடவை சொன்னேன் வைத்தியரிடம் போகும் படி. அப்போது போயிருந்தால் ஆரம்பக் கட்டமாகக் கூட இருந்திருக்கலாம்

ஊகங்களால் நாமே ஒவ்வொன றுக்கும் காரணம் தேடிக் கொள்கிறோம். அதன் மூலம் அசட்டைப்படவும், அவலங் களில் இருந்து அன்றாடங்களில் தப்பிக் கொள்ளவும் முனைகிறோம் உண்மை எப்போதும் வேறாகவே இருந்து தண்டித்து விடுகிறது என்றாள் குளத்தை வெறித்தபடி.

நாமெல்லோருமே அனேகமாக அவள் போலத்தான். ஊகங்களால் தப்பிக்கக் காரணம் தேடிக் கொண்டு உண்மையிடம் பலியாகிக் கொண்டிருக்கிறோம்.

பி.கு. எனக்காகவல்ல உங்களுக்காக. பெண்களுக்காகத் தான் எழுதியுள்ளேன். பச்சையா பெண்களை எழுதுறா என விமர்சனம் வைப்போர், உங்களுக்கு விரும்பின நிறம் பூசி வாசியுங்கள் கோபப் படமாட்டேன்.







சேவியர்
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# டிஜிடல் காட்டில் அச்சு ஊடகங்கள்

அச்சு ஊடகங்கள் ஒரு காலத்தில் உலகையே கோலோச்சிக் கொண்டிருந்தன. ஒரு ஒட்டுமொத்தக் கருத்துருவாக்கத்தை உலகளாவ சட்டென உருவாக்கக் கூடிய வலிமை படைத்ததாக அச்சு ஊடகங்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தன. சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை நாம் பெட்டிக் கடைகளிலும், சலூன் கடைகளிலும் காத்து நின்று பேப்பர் படித்த நினைவுகள் இன்றும் பசுமையாகத் தானே இருக்கின்றன ! அப்போதெல்லாம் தெருவுக்கு ஒரு ‘வாசக சாலை’ உருவாக்குவது பெரிய கனவாய் இருந்தது. சில செய்தித் தாள்கள், சில வார இதழ்கள், சில மாத இதழ்கள் என அவை எப்போதும் வாசகர்கள் மொய்க்கும் தோட்டங்களாய் இருந்தன. ஊருக்கு ஒரு நூலகம் என்பது ஒரு இலட்சியமாய் இருந்தது, அவை வாசிப்பையும் நேசிப்பையும் வலுவாக்கின.

இன்றைக்கு காலம் மாறி விட்டது ! உலக அளவில் ஜாம்பவான்களாய் இருந்த த டைம்ஸ், த நியூயார்க் டைம்ஸ், த கார்டியன், வாஷிங்டன் போஸ்ட், வால்ஸ்ட்ரீட் ஜென்ரல், த டெலிகிராஃப், த சிட்னி மானிங் ஹெரால்ட், த இந்து போன்றவையெல்லாம் இன்னும் மனதுக்குள் இனம் புரியாத ஒரு பிரமிப்பை உருவாக்குகின்றன. தமிழிலும் சுதேசிமித்திரன் காலம் தொடங்கி, தமிழ் முரசு, தினத்தந்தி , வெற்றிமணி என இன்றைய நாளிதழ்கள் வரை பயணம் மிக மிக நீளமானது.



ஆனால், டிஜிடலின் வருகைக்குப் பின் அச்சு ஊடகங்களின் ஆதிக்கம் மெல்ல மெல்ல விடை பெறத் தொடங்கி விட்டது. செய்திகளைத் தெரிந்து கொள்ள அச்சுப் பத்திரிகை வெளியாகும் நேரம் வரை காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. டிஜிடல் ஊடகங்கள் உடனுக்குடன் செய்திகளை, ஃபாஸ்ட் புட் போல பரிமாறிக் கொண்டே இருக்கின்றன. இதனால் மறுநாள் காலையில் வெளிவரும் செய்தித் தாள்கள் பிரிட்ஃஜிலிருந்து பரிமாறப்படும் பழைய சாத்தைப் போலத் தான் நமக்குத் தோன்றுகின்றன. நாம் அறியாத செய்திகள் எதுவும் இருப்பதில்லை. நாம் வாசிக்காத தகவல்கள் எதுவும் இருப்பதில்லை!

காலையில் காபி குடித்தபடி, பேப்பர் படிக்கின்ற நினைவுகள் பழைய தலைமுறைக்கு வரப்பிரசாதம். ஆனால் இன்றைக்கு போர்வைக்குள்ளேயே மின்னலடிக்கின்ற டிஜிடல் வெளிச்சத்தில் செய்திகள் விளம்பப்படுகின்றன. அதனால் காலையில் வருகின்ற செய்தித் தாள்கள் கூட பல வேளைகளில் வெங்காயம் மடித்துக் கட்டத் தான் பயன்படுத்தப்படுகின்றன.

அச்சு ஊடகங்கள் தங்களுடைய இருப்பை இப்போது முழுமையாக டிஜிடல் வீதிகளுக்கு இடம்பெயரச் செய்து விட்டன. செய்தித் தாள்களை டிஜிடல் சந்தா முறைகளுக்கு மாற்றி விட்டன. முன்பெல்லாம் கோடிக்கணக்கில் அச்சான பத்திரிகைகள், இப்போது இலட்சக் கணக்கிலோ, ஆயிரக்கணக்கிலோ, நூற்றுக்கணக்கிலோ தான் அச்சாகின்றன. ஆனால் அதே பத்திரிகைகளை உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான வாசகர்கள் டிஜிடல் முறையில் வாசித்து மகிழ்கின்றனர்.

அச்சு ஊடகங்கள் கொண்டு சேர்க்க முடியாத தெருக்களிலும், நாடுகளிலும் இன்றைக்கு அதன் டிஜிடல் பதிவுகள் சென்று சேர்கின்றன. காலையில் வீடுகளில் பேப்பர் எறிந்து செல்கின்ற சிறுவர்களின் வாழ்க்கை இப்போது வேறு இடங்களுக்கு மாறிவிட்டது. அப்துல் கலாம் போன்ற மாபெரும் தலைவர்

17 ஆம் பக்கம் பார்க்க...







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

களின் பால்யத்தைப் பரவசப்படுத்தியிருந்த அச்சு நாளிதழ் வினியோகம் இன்றைக்கு வெகுவாகக் குறைந்துவிட்டது. ஒரு முக்கியக் காரணம், பல மடங்கு அதிகரித்திருக்கும் அச்சுப் பதிப்பின் செலவுகளும், பல மடங்கு குறைந்திருக்கின்ற அச்சு இதழ்களுக்கான வருமானமும் தான். ஒரு காலத்தில் விளம்பரங்கள் என்றாலே அச்சு ஊடகங்கள் என்றிருந்த நிலை இன்றைக்கு சுத்தமாக இல்லை. விளம்பரங்களில் வந்து கொண்டிருந்த மிகப்பெரிய வருமானம் இன்றைக்கு டிஜிடல் மார்கெட்டிங் பகுதிக்கு இடம்பெயர்ந்திருக்கிறது.

இன்றைய உலகம், மிகப்பெரிய தொழில்நுட்பப் புரட்சியின் மையத்தில் தான் சுழன்று கொண்டிருக்கிறது. வசீகரமான வருகைகள் வாசகர்களையும், பார்வையாளர்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. ஏ.ஐ, மெஷின் லேர்னிங், டேட்டா சயின்ஸ் போன்றவற்றைக் கொண்டு டிஜிடல் மீடியா உருவாக்குகின்ற செய்திப் பதிவுகள் வசீகரிக்குமளவுக்கு செய்தித் தாள்களின் பாரம்பரிய முறை வசீகரிப்பதில்லை. புற்றீசல் போலச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கும் தகவல் பரிமாற்றத்தின் சுழலில் அச்சுப் பத்திரிகைக்காகக் காத்திருக்க வேண்டிய சூழலும் இன்றைக்கு இல்லவே இல்லை.

அச்சு ஊடகங்களுக்கு ஒரு காலத்தில் இருந்த நம்பகத் தன்மையும் இன்றைக்கு இல்லை. ஒருகாலத்தில் அவர்கள் கட்டமைப்பதே செய்தி எனும் நிலமை இருந்தது. ஆனால் இன்று அந்த நிலை இல்லை. அச்சு ஊடகம் சொல்கின்ற ஒரு பிழையான செய்தியையும் அக்கு வேறு ஆணி வேறாய்ப் பிரித்துப் போட்டு விமர்சிக்க இன்றைக்கு சர்வதேச அளவில் வலிமையான டிஜிடல் மீடியாக்கள் களத்தில் இருக்கின்றன.

ஒரு காலத்தில் எழுத்தாளர்களுக்குக் கிளர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்த அளவுக்கு இன்றைக்கு அச்சு ஊடகங்கள் வசீகரிப்பதில்லை. அவர்கள் தங்களுடைய சிந்தனைகளை டிஜிடல் ஊடகங்களில் பதிவிடுகிறார்கள். அவர்களுக்கு உடனுக்குடன் கிடைக்கின்ற லைக், கமெண்ட்,









# டிஜிடல் காட்டில் அச்சு ஊடகங்கள்

கைத்தட்டல் போன்றவை தருகின்ற போதையை அச்சு ஊடகங்கள் தருவதில்லை. ஆண்டுக்கு நாலு எழுத்தாளர்களை அச்சு உலகம் உருவாக்கிக் கொண்டிருந்ததென்றால், நாளுக்கு நாலாயிரம் எழுத்தாளர்களை டிஜிடல்




உலகம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே எழுத்தாளர்களின் சொர்க்கமாய் இன்றைக்கு டிஜிடல் தான் இருக்கிறது.

இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமெனில், ஆதிக்க வர்க்கத்தின் கைகளில் இருந்த அச்சு ஊடக ஆதிக்கத்தை இன்றைக்கு டிஜிடல் உலகம் சாமான்யனின் கையில் தந்திருக்கிறது. சாதி மத இன அடையாளங்களைத் தாண்டியும் ஒரு எழுத்தாளன் டிஜிடல் வெளியில் தனது பதிவுகளில் வாழ முடியும். ஆனால் அச்சு ஊடகங்கள் ஒரு காலத்தில் குறிப்பிட்ட மனிதர்களையே அரவணைத்திருக்கிறது என்பதே வரலாறு.

இன்னும் ஒரு படி மேலே போய் டேட்டா சயின்ஸும், ஆகுமெண்டட் ரியாலிட்டியும் ஒவ்வொரு வாசகனுக்கும் தேவையான செய்திகளை டிஜிடல் உலகில் தரம் பிரித்துத் தருகின்றன. அவனுடைய ரசனைக்கு ஏற்ற செய்திகளையும், படங்களையும், வீடியோக்களையும் மட்டுமே அவன் பார்க்கும்படி செய்கின்றன. எனவே ஒருவன் தன் ரசனையிலேயே ஆழமாய் பயணிக்கவும், ஆர்வமாய்ப் பயணிக்கவும் வாய்ப்புகள் அதிகமாய் இருக்கின்றன. அச்சு ஊடகத்தில் அந்த வசதி இல்லை ! தருகின்ற செய்தியைப் பிடித்திருந்தாலும், பிடிக்காவிட்டாலும் படித்துக் கடக்க வேண்டும் அவ்வளவு தான்.

இப்படி ஒரு மிகப்பெரிய காலமாற்றத்துக்குள் அச்சு ஊடகங்கள் வந்திருந்தாலும், அவை முழுமையாய் அழியும் என்று சொல்வதற்கில்லை. அவை பரிணாம வளர்ச்சியடைந்து வேறு ஒரு வகையில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

முதலில் ஒரு அச்சுப் பத்திரிகை தனக்கான ஒரு நம்பிக்கையை உருவாக்க வேண்டும். இரண்டாவது, மேலோட்டமான செய்திகளைச் சொல்லாமல் ஆழ உழுகின்ற ஆரோக்கியமான செய்திகளைச் சொல்ல வேண்டும். மூன்றாவதாக எடிட்டோரியல் போன்றப் பதிவுகளில் காலத்துக்கும், மனித குலத்துக்கும் ஏற்ற சிந்தனைகளைச் சொல்ல வேண்டும்.

வெறுமனே கிளுகிளுப்புச் செய்திகளைப் பரிமாறி கல்லா கட்டுகின்ற காலங்களைக் கடந்து அச்சு ஊடகங்கள் இனிமேல் ஒரு ஆரோக்கிய




மான புதிய பயணத்தைத் தொடங்க வேண்டும். அதன் இருப்பை டிஜிடல் தளங்களுக்கும் இடம் பெயரச் செய்ய வேண்டும்.

இன்றும் ஒரு செய்தித்தாளைப் பிரித்து, அதை உதறி விரித்துப் பிடிக்கின்ற அனுபவம் அலாதியானது. அது கடந்த தலைமுறையில் வேர்விட்டு, இந்தத் தலைமுறையிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாசகர்களுக்கே புரிகின்ற அனுபவம். அந்த அனுபவத்தை மட்டும் வைத்துக் கொண்டு அச்சு ஊடகங்கல் கோலோச்ச முடியாது. காரணம், இன்றைய தலைமுறை வித்தியாசமானது. அவர்களுடைய அவசரத் தேவைகளுக்கும், அவர்களுடைய ரசனைகளுக்கும், அவர்களுடைய தேடல்களுக்கும் தீனி போடும் வகையில் இவை மறு உருவாக்கம் பெற்றால் மட்டுமே நிலைக்க முடியும் !

**அச்சு ஊடகங்கள் வரலாற்றுப் பதிவு ! அதை மீண்டெடுப்பது**



03 ஆம் பக்கத் தொடர்ச்சி...


# ரணில் விக்கிரமசிங்க என்ன செய்யப்போகிறார்?

திறந்துவைத்திருப்பார் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான களத்தைத் தயார்படுத்துவதற்கான வேலைகளை அவர் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார். அதேவேளையில், தனது கட்சியினரையும் தனது எதிராளிகளையும் குழப்பத்திலேயே அவர் வைத்திருக்கின்றார். தனது முடிவுக்கு சாதகமானகள நிலையை உருவாக்கிவிட்டு, அவர் திடீரென காய்களை நகர்த்தி எதிராளிகளைத் திகைக்கவைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

19 ஆவது திருத்தம் அரசியலமைப்பில் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது. அப்போதைய மைத்திரி - ரணில் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல விரும்பாததால் அந்த சர்ச்சை தீர்க்கப்படாததாகவே இருக்கின்றது.

அரசியலமைப்பில் உள்ள இந்த சர்ச்சை குறித்து தகவல்கள் கடந்த வாரம் வெளியானதையடுத்து, அரசாங்க உயா ்மட்டத்திலும் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. அரசியலமைப்பில் உள்ள இந்த தவறைப் பயன்படுத்தி தற்போதைய ஜனாதிபதி தனது பதவிக்காலத்தை சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்லாமலேயே ஒரு வருடத்துக்கு நீடிக்க முடியும் என்று ஆளும் கார்த்திக்கு நெருக்கமான சட்ட துறை சார்ந்தவர்கள் சொல்கின்றார்கள்.



அரசியலமைப்பில் காணப்படும் இந்தக் குறைபாட்டுக்கு காரணம் என்ன என்ற கேள்வி பல்வேறு தரப்பினராலும் அனுப்பப்பட்டு வருகிறது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜயம்பதி விக்கிரமரட்ண இதற்கான காரணத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார். 19 ஆவது திருத்தத்தை வரைந்த சட்ட நிபுணா ் குழுவில் அவரும் ஒருவர். 19 ஆவது திருத்தம் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாமல், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அப்போதைய அரசாங்கம் அறிவுறுத்தியது என்று அவர் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்துக்கும் இந்த அரசியலமைப்பு குழறுபடி தெரிந்தே இருந்தது. ஆனால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் கொடுத்த வாக்குறுதியின்படி 19 ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதில் உறுதியாக இருந்தா ் என்றும் ஜயம்பதி தெரிவித்தார்.

19ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகக் குறைத்து அரசியல் சாசனம் திருத்தப்பட்டாலும் கூட ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6 ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்க நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கின் ஒப்புதலும் வாக்கெடுப்பும் தேவை என்று 83 (ஏ)



சரத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒக்ரோபரில் நடைபெறக்கூடிய தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்களை ரணில் ஆராய்வார். மக்களின் ஆதரவுடன் மீண்டும் அதிகாரத்துக்கு வருவதுதான் அவரது முதலாவது தெரிவாக இருக்கும். அதில் அவர் திருப்தியடையவில்லையாயின் மற்றொரு தெரிவை நோக்கி செல்வது அவருக்குத் தவிர்க்கமுடியாததாகலாம். அந்த விடயத்தில் நாடாளுமன்றம் அவருக்கு சாதகமாகவே இருக்கும். அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு நாடாளுமன்றம் நிச்சயமாக ஆதரவளிக்கும்.

நாடாளுமன்றத்தில் இப்போது அதிக ஆசனங்களைக் கொண்டிருப்பது மொட்டுக் கட்சி. அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நாடாளுமன்றம் வரும் வாய்ப்பு கிடைக்குமா என்பது சந்தேகம்தான். அதனால், மேலும் ஒரு வருடம் பதவியை நீடிக்க அவா ்கள் விரும்பலாம்.

ஜூலை மாதம் 21 ஆம் தேதி தன்னுடைய நிலைப்பாடு என்ன என்பதை ஜனாதிபதி அறிவிப்பாளர் எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தலில் போட்டியிடும் அறிவித்தலை அவர் முதல் முதலாக உத்தியோபூர்வமாக அன்று வெளியிடுவார் என்பது பல்வேறு தரப்புகள் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அதுவரை ரணில் என்ன செய்வார் என்ற எதிர்பார்ப்பில் இருப்பது தவிர்க்க முடியாத ஒன்றுதான்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## தவிர்க்க முடியாதா?

நன்றி: ஹாய் நலமா

### எடை அதிகரிப்பதைத் தடுப்பது எப்படி?

எடை அதிகரிப்தைத் எடையைக் குறைப்பதற்கு மாயாஜால முறைகள் எதுவும் கிடையாது. மருத்துவர்கள் கிறுக்கித்தரும் மாத்திரைகளோ, ஊடகங்களில் விளம்பரப்படுத்தும் மருந்துகளோ, கிறீன் ரீயோ, கொள்ளுச் சாப்பிடுவது போன்றவையோ மட்டும் உதவப் போவதில்லை. உங்கள் முயற்சிதான் அதிமுக்கிய விடயாகும்.

### 1. சோர்ந்திருக்காதீர்கள்

கூடியவளவு உடல் உழைப்பில் ஈடபடுங்கள். சோர்ந்து கிடக்காதீர்கள். நடந்தால் கால் உழைவு கை உழைவு என்று சாட்டுச் சொல்லாதீர்கள். முயற்சியில் இறங்குங்கள். அந்த வயதிற்கு ஏற்றது நடைப் பயிற்சி. வாரத்தின் பெரும்பாலன நாட்களில் 30 நிமிடங்களுக்கு குறையாது கை கால்களை விசுக்கி வீசி நடவுங்கள். துள்ளல் நடை நீச்சல் பயிற்சிகளும் நல்லது. வீட்டுத் தோட்டம் செய்யுங்கள். மாடிப்படிகளில் ஏறி இறங்குங்கள்.

இவற்றைத் தவிர நாளாந்த வீட்டு வேலைகளிலும் ஈடுபடுங்கள். கூட்டுங்கள் கழுவுங்கள், தூசு தட்டுங்கள்.

### 2. உணவில் கவனம் எடுங்கள்.

சாப்பிடுங்கள் பட்டினி கிடக்காதீர்கள். உணவைத் தவிர்க்காதீர்கள். ஆனால் உணவின் அளவிலும் எத்தகை உணவு உண்பது என்பதிலும் மாற்றங்கள் செய்யுங்கள். எண்ணெய் பொரியில் கொழுப்பு போன்றவற்றைத் மிகவும் குறையுங்கள். சோறு இடியப்பம் புட்டு பாண் போன்ற மாப்பொருள் உணவுகளை அளவோடு உண்ணுங்கள். அல்லது சற்றுக் குறையும். அதற்கான மொத்த உணவின் அளவைக் குறைக்க வேண்டியதில்லை. காய்கறிகள் பழவகைகளை அதிகம் சேருங்கள்.

### 3. கலோரி வலு

அதே போல அருந்தும் பானங்களும் அதிக கலோரி வலு அற்றதாக இருக்க வேண்டும். மென்பானங்கள், இனிப்பூட்டிய பழச் சாறுகள், போன்றவற்றைத் தவரிக்க வேண்டும். நாளாந்த அருந்தும் தேநீர் கோப்பி போன்றவற்றிக்கு சேர்க்கும் சீனியின் அளவையும் குறைப்பது அவசியமாகும். தண்ணீர், மோர். அதிகம் இனிப்பு சேர்க்காத உடன் பிழிந்த பழச்சாறுகள், இளநீர் போன்றவற்றை கூடியளவு உபயோகியுங்கள். இவற்றைக் கடைப்பிடித்தால் மாதவிடாய் நின்ற பின்னரும் மோகவைக்கும் குமரிபோல உங்கள் உடல் வனப்பைப் பேணிக்கொள்ளலாம்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நேற்று, இன்று, நாளை- காலப் பயணம் செய்வோமா?

## விண்வெளி வீரர்கள் உயர்ந்த வேகத்தில் பயணிக்கும் போது நிலத்தில் இருப்பவர்களை விட மெதுவாக வயதாகின்றனர்.

ஒரு நவீன இயந்திரத்தில் நீங்கள் நுழைந்து, சில பொத்தான்களை அழுத்துகிறீர்கள் என்று எண்ணுவோம். இதைத் தொடர்ந்து அடுத்த நொடியில் நீங்கள் இராஜராஜ சோழனை அல்லது ஆல்பர்ட் ஐன்ஸ்டீனைச் சந்தித்தால் எப்படி இருக்கும்? ஹாலிவுட் பெரும்பாலும் காலப் பயணத்தை உடனடித் திடீர் நிகழ்வாகவே காட்டினாலும், அதன் பின்னணியில் இருக்கும் இயற்பியல் அறிவியல் மிகவும் சிக்கலானது, ஆனால் அதே நேரத்தில் மிகவும் சுவாரசியமானதாகும். எனவே நம்மால் நேரத்தின் பயணிகள் ஆக முடியும் என்ற சாத்தியக்கூறுகளைப் பற்றி அறிவோமா?

உங்களுக்கு ஒன்று தெரியுமா? நீங்கள் ஏற்கனவே ஒரு காலப் பயணியாகத் தான் இருக்கிறீர்கள். ஒவ்வொரு விநாடியும் சரியாக ஒரு விநாடி எதிர்காலத்தை நோக்கிச் செல்கின்றீர்கள். அது கண்டிப்பாக மறுக்கமுடியாத ஒரு உண்மை ஆகும். இதை விட சில மெய்சிலிர்க்கவைக்கும் அறிவியல் கொள்கைகள், காலத்தின் ஓட்டம் அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்காது என்பதையும், அது மாறலாம் என்பதையும் காட்டுகின்றன. உதாரணத்திற்கு இதைப் பாருங்கள்: ஒரு விண்வெளி வீரர் கிட்டத்தட்ட ஒளியின் வேகத்தில் தொலைவிலிருக்கும் ஒரு நட்சத்திரத்திற்குப் பயணித்து பூமிக்குத் திரும்புகிறார் என்று எடுத்துக்கொள்வோம். ஏறத்தாள ஒளியின் வேகத்தில் பயணித்த அந்த விண்வெளி வீரர் ஒரு சில ஆண்டுகள் மட்டுமே வயதானாலும், பூமியில் பல பத்தாண்டுகள் கடந்திருக்கலாம். இது அறிவியல் புனைகதை அல்ல, இது முற்றிலும் இயற்பியலாகும். உண்மையில், சர்வதேச விண்வெளி நிலையத்தில், பூமியைச் சுற்றி, விண்வெளி வீரர்கள் உயர்ந்த வேகத்தில் பயணிக்கும் போது, நிலத்தில் இருப்பவர்களை விட மெதுவாக வயதாகின்றனர்.



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)

சரி எதிர்காலத்துக்குப் பயணிப்பதற்கு மிகவும் வேகமாகச் சென்றால் போதும், பயணித்துவிடலாம், இனி கடந்த காலத்தை எவ்வாறு அடையலாம் என்று ஆராய்வோம். என்னதான் எதிர்கால பயணம் சாத்தியமாய் தெரிந்தாலும், கடந்த காலத்திற்குப் பயணிப்பது மிகவும் சிக்கலானது. இதற்கு நேரச் சுழற்சி (time loop) என்று கூறப்படும் ஒரு வழிமுறையை உபயோகிக்கவேண்டும். நேரச் சுழற்சியின் உதவியுடன் நீங்கள் காலத்தில் பின்னோக்கிச் செல்லலாம் என்று கூறப்படுகிறது. இந்த யோசனை கற்பனைக்கு அப்பாற்பட்டது. இவ்வாறான ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்குவதற்குக் கூட நம்மிடம் தகுந்த கருவிகள் இல்லை.



இந்த நேரச் சுழற்சிகளை ஆராய்ந்த அறிவியலாளர்கள், நேரத்தின் பாதைகள் குறித்து சுவாரசியமான கேள்விகளை எழுப்பியுள்ளனர். உதாரணத்திற்கு நீங்கள் இறந்த காலத்திற்குச் சென்று உங்கள் பாட்டனார் உங்கள் பாட்டியைச் சந்திப்பதைத் தடை செய்துவிடுகின்றீர்கள் என்று எடுத்துக் கொள்வோம். அவ்வாறு நடந்தால், நீங்கள் பிறக்க முடியாது. நீங்கள் பிறக்கவில்லை என்றால், நீங்கள் எவ்வாறு இறந்தகாலத்திற்குச் சென்று உங்கள் பாட்டனார் உங்கள் பாட்டியைச் சந்திப்பதைத் தடை செய்ய முடியும்? இந்த சிக்கல்கள், கடந்த காலத்திற்குப் பயணிப்பது எவ்வளவு சிக்கலானது என்பதை விளக்குகின்றன.

இருந்தும் காலப் பயணத்தின் கோட்பாடுகள் சாத்தியமா என்பதை ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து ஆராய்கின்றனர். சமீபத்திய வாதம் என்னவென்றால், காலப் பயணம் மேற்கூறிய சிக்கல்களை அடக்காமல், சாத்தியமானது என்பதே ஆகும். பயனுள்ளதாகக் காலப் பயணம் எட்டாத நிலையிலிருக்கும் போது, அறிவியல் கோட்பாடுகள் மற்றும் ஆராய்ச்சிகள் காலப் பயணத்தைப் பற்றிய மிகச் சுவாரசியமான கண்டுபிடிப்புகளை வெளிகொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை. காலப் பயணத்தை எட்டுவதற்கான பயணம் சிக்கல்களாலும், அசாதாரண பொருள்களாலும், மைல் கடந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்களாலும் நிறைந்துள்ளது. நாமே காலப் பயணிகள், ஒவ்வொரு விநாடியும் ஒரு விநாடி முன்னே சென்று, நூற்றாண்டுகளைக் கடந்து செல்கின்றோம்.

ஒரு நாள், யாராவது ஒரு கருவியிலிருந்து வெளியே வந்து எதிர்காலத்தை அல்லது கடந்த காலத்தைப் பற்றிக் கூறக்கூடும். ஆனால், அதுவரை, காலப் பயணம் பற்றி ஆராய்ந்தாலும், அது எங்கள் மனதைக் கவர்ந்துகொண்டு, அறிவியலும் கற்பனையும் தாண்டிய கணங்களைத் தருகிறது. நாம் காலப் பயணம் செய்யும் நாள், நமக்கு அருகில் தான் இருக்கிறதோ யாருக்குத் தெரியும்?









# இலங்கையில் சிறப்பாக நடைபெற்ற 'யாழ் பாடி யாழ்பாணம்' இசை வெளியீட்டு விழா

இசை,வரிகள், பாடியவர்: ஈழத்து மெல்லிசை மன்னர் M.P.Paramesh பின்னனி இசை ஒருங்கமைப்பு: பிரபாலினி பிரபாகரன்.இலங்கையில் 1968-களின் பிரபலமான பாடகர், கவிஞர், இசையமைப்பாளர் ஈழத்து மெல்லிசை மன்னர் எம்.பி.பரமேஷ் அவர்களின் முத்தான மூன்று பாடல்கள் இலங்கையின் பெருமை, வரலாற்று நிகழ்வு மற்றும் சரித்திர சாட்சிகளை கவிதையாக எழுதி, இசை வடிவம் கொடுத்து, பாடிய இனிய பாடல்கள்.

அந்த பாடல்களுக்கு இசை ஒருங்கிணைப்பு செய்த அவரது தவப்புல்வி ஈழத்து மெல்லிசை குயின் பிரபாலினி பிரபாகரன் இந்த பாடலை தயாரித்து இயக்கி உள்ளார். தனது தந்தையின் கனவை நிறைவேற்றும் விதமாக மே மாதம் 27ம் தேதி கொழும்பு வெள்ளவத்தை புளூா சபையர் அரங்கில் அரசியல் பிரமுகர்கள், அமைச்சர்கள், ஊடகவியளார்கள் மற்றும் சமகால பாடகர்கள் முன்னிலையில் இசை வெளியீட்டு விழா நடந்தது. அந்த பாடலை QUEEN COBRA என்ற வலைதளத்தில் பார்த்து ரசிக்கலாம்.

யாழ்பாடி யாழ்பாணம்-பெயர் கொண்டது- என்ற பாடல் தழிழர்களின் அதிகம் வாழும் என்பதை நயமாக அங்கு அருள்பாலிக்கும் நல்லூர் கந்தசாமி கோவிலையும், யோகர் சுவாமிகளின் மகிமைகளையும், புலவர்கள் பெருமக்களைப் பற்றியும், ஆண்ட மன்னர்களைப் பற்றியும், கீரி மலை தீர்த்த கேணியும், பாரிவன சிவனையும், வள்ளிபுர ஆழ்வாரையும், மாவிட்டபுரம் செல்ல சன்னதி, வற்றா கிணறு நிலாவரை, திரு நெல்வேலி விவசாயப் பண்ணை- இன்னும் யாழ்பணத்தின் சிறப்புகளை ஆழமாய் சொன்ன பாடல். மிஞ்சி இருக்கும் இலங்கை மக்களின் மனதுக்கு ஆறுதலாய், அற்புதமான பாடலை கண்டு மகிழுங்கள்- இந்த பாடல்கள் தமிழ்நாடு மற்றும் இலங்கை தொழில்நுட்ப கலைஞர்களின் உதவியுடன் இலங்கையில் படமாக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# கைல்புறோன் நகரில் வெற்றிவாகை சூடிய யாழ் எழில் கோண்டாட்டம்







பேரெழில் பெற்று பெரும்புகழ் படைத்த யாழ் எழில்கொண்டாட்டம் என இப்பகுதி மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

கடந்த ஆனிமாதம் 07,08,09ம் ஆகிய மூன்று தினங்களில் எண்ணாயிரம் மக்கள் வரை கலந்து கொண்டாடிய பெரும் விழாவாக இந்த மாநிலத்தில் இடம்பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது.

பிராந்திய ஊடகங்களும், சமூகவலைத் தளங்களும், மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் படங்களுடன் வெளியிட்டு கொண்டாட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தினர். 30 மேற்பட்ட கடைகளும், சிறுவர்களுக்கான விளையாட்டு, மற்றும் அறுசுவை உணவும் மக்களை தம்வசப்படுத்தியது. மேலும் எதிர்காலத்தில் கொண்டாட்டம் வளர்ச்சி பெறும் என்பதனை நடந்து முடிந்த நிகழ்சிசகளும், மக்கள் வரவும் எடுத்துக்காட்டுகின்றன. இந் நிகழ்வை ஒருங்கமைத்தவர்கள் இந்து கலாச்சார கல்வி மன்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

# பறவையும் நானும் ஒன்றாகவே பறந்தோம் மகிழ்ந்தோம்

**மாதவி** (யேர்மனி)

10.05.2024. Algarve. Portugal. பறவை பறக்கும் வரை காத்திருந்து சுடுவது ஒரு (படம் எடுப்பது) அற்புதமான அனுபவம்.

போத்துக்கல் அல்காறா வ் (Algarve) கடற்கரையில் 09.05.2024 மாலை 4.மணிக்கு ஒரு பறவை என்முன் இருந்த தூணில் வந்து அமர்ந்தது. பொதுவாக மூன்று நான்கு நிமிடங்களில் பின் மீண்டும் பறந்துவிடும்.




நான் நான்கு ஆண்டுகளுக்கு முன் நோர்வே நாட்டில் வசிக்கும் கீதா இரவி அவர்கள் எடுத்த புகைப்படங்கள் பலவற்றை வெற்றிமணி பத்திரிகையில் பிரசுரித்து உள்ளேன்.

அப்போ அவர் தனது அனுபவங்களையும் பகிர்ந்து இருந்தார். இப்போது எனக்கு ஒரு சந்தர்ப்பம். அந்த அனுபவங்களை நானும் சுயமாக அனுபவிக்க.

என்முன் அமர்ந்த பறவை பறக்கவே இல்லை. நாம் நண்பர்கள் ஆகிவிட்டோமோ! இல்லை நானும் பறவையாகிவிட்டேனோ!

அதனாலோ என்னவோ பறவையும், பயமில்லாமல் ஓய்வெடுத்தது.

எனக்கு கைதொலை பேசியை தூக்கிப்பிடிக்க,பிடிக்க சற்று பிரசவலி ஆரம்பித்தது.

எனக்கு மீண்டும் கீதா இரவி யின் நினைவு வந்தது,அவள் கேமராவும் (Camera :



Canon EOS 7D Mii

Lens : Sigma 60mm-600mm 3kg 400 g) நீண்ட ஜ/ம் லென்ஸ் இவற்றை எப்படிச் சுமந்து இருப்பாள்.

எழுந்து நடமாடும் இயல்பும் அற்றவள். இருந்தும் அவள் புகைப்படக்கலை மீது கொண்ட வெறியை உணர்த்தவே அவள் தனிப்பட உடல் நிலையை குறிப்பிட்டேன். சில அனுபவங்கள் சுயபரீட்சைக்கு உட்படும்போதுதான் அதன் ஆழம் புரியும்.



பறவை என்னுடன் நேசம் கொண்டாடியது. பறவையை பறக்கவைக்க உஷ்! உஷ்! என்றேன். அது தன்னுடன் கதைப்பதாக எண்ணியேதே அன்றி, பயம் கொண்டு பற-க்கவில்லை. அந்த நேரம் என்னை நோக்கி ஒரு நேடிய மனிதன் நடந்து வர, பறவை பறந்தது. பறவைக்கு அவன் அந்நியன், அப்படி என்றால் நான்.

நான் சுட்டேன். சிறகு விரிக்கும் நேரம். மகிழ்ச்சி யில் பறவை மட்டுமல்ல நானும் சேர்ந்து கூடவே பறந்தேன்.


**படங்கள் வெற்றிமணி.**
**உண்மையாக நான் சுட்டது.**


## லூட்ஸ் மாதா புனிதப்பயணம் 2024

2024

July 2024

JULY


**லூட்ஸ் மாதா கோவில்,**
Paduwa, Venedig,
Lissabon, Fatima, **ஆகிய இடங்களுக்கு**
July, **மாதம் பஸ் மூலம்**
**பிரயாணம் செய்ய, ஒழுங்குகள்**
**செய்யப்பட்டுள்ளது.**

**முன்கூட்டியே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.**
**தொடர்புகளுக்கு: முருகா** (K. MURUGA) 0297 27754, 0175 850 1489



# தொட்டவன் விட்டுப் போகத் தொடர்ந்தவன் தொடரக் காலம் நகர்கின்றது

**வாழ்க்கையில் எது நிஜம்? எது நிரந்தரம்? எது சொந்தம்?**

ஒவ்வொரு மனிதனின் உடலும் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டு உருவாகின்றன. உடலமைப்பும் உருவ அமைப்பும் அப்படியேதான் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் செயற்பாட்டிலே திட்டமிடலிலே மாற்றங்களை ஏற்படுத்த மருத்துவர்களும், விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும்,எலன்மாஸ்க் போன்ற தனவந்தர்களும் முயன்று கொண்டிருக்கின்றார்கள். ஆனால், யார் நிரந்தரமாக உலகில் வாழுகின்றார்கள்?

எழுதிக் குவிக்கும் எழுத்தாளர்களும், இரவு பகலாகக் கண் விழித்துத் தொழிற்படுகின்ற ஆராய்ச்சியாளர்களும் இந்தப் பூமிப்பந்திலே காணாமலே போகின்றார்கள். அவர்கள் தாம் இழந்த பொழுதுகளை, அனுபவிக்கத் தவறிய வாழ்க்கையை இழந்துதான் போகின்றார்கள். பின் தொடர்பவர்கள் காணாமற் போனவர்களின் முயற்சிகளை அனுபவிக்கின்றார்கள்.

கண்ணன் எங்கே? புத்தர் எங்கே? கடவுளாக்கி அனுபவிக்கின்றார்கள். வள்ளுவர் எங்கே? பாரதி எங்கே? இளங்கோ எங்கே? தொடரும் எழுத்தாளர்கள் அவர்களின் கருத்துக்களை அனுபவிக்கின்றார்கள். காந்தி எங்கே? கலைஞர் எங்கே? எம். ஜி.ஆர்.எங்கே? தொடரும் அரசியல்வாதிகள் அனுபவிக்கின்றார்கள். பூக்களிலே தேனெடுத்துத் தேனீக்கள் கூடுகளிலே தேன் சேமித்து வைக்கின்றன. ஆனால் அந்தத் தேனைத் தேனீக்களா அனுபவிக்கின்றன? அந்தத் தேனை யாரோ எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். முத்தைச் சிப்பி காவல் காத்து வைத்திருக்கும். ஆனால், அது யாராலோ அனுபவிக்கப்படுகின்றது. இவ்வாறு தொட்டவன் விட்டுப் போகத் தொடர்ந்தவன் தொடரக் காலம் நகர்கின்றது. உயிர்களை உதிர்த்துவிட்டுப் போகின்றது.

இந்தப் பூமிப்படுக்கையிலே இயற்கை அழகுக் குவியலைக் கொட்டி விட்டிருக்கின்றது. அதை அணுஅணுவாக அனுபவித்து வாழக் கற்றுக் கொள்ள மனிதனின் மூளை இடம் தருவதில்லை. உண்மையிலே புத்தி சுவாதீன முற்றவனே வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்கின்றான். அவனுக்கு எவ்வித கடமையும் இல்லை. கட்டுப்பாடு களும் இல்லை, சோகமும் இல்லை, துக்கமும் இல்லை. பசித்த வேளை உண்பான், களைத்த வேளை உறங்குவான். மனிதனின் மூளையும், அனுபவங்களும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுமே அவளை உறங்கவிடாது சுறுசுறுப்பாக வைத்திருக்கின்றது.



**கௌசி சிவபாலன்**
(யேர்மனி)

வாழ்க்கையை அனுபவிக்க வேண்டிய் கட்டாயம் மனிதனுக்கு இருக்கின்றது. ஆனால், என்ற சந்தேகத்துடனேயே தொடர்கின்றேன். இரவு படுக்கையில் விழுகின்ற போது அழகான கனவு வருகின்றது. அதனோடேயே வாழுகின்றோம், அனுபவிக்கின்றோம். ஆனால் விடிந்ததும் இது கனவா! என்று ஆச்சரியத்துடன் சா.... என்று கவலைப்படுகின்றோம். இதுபோலவே ஒரு விடுமுறைக்குச் செல்லுகின்றோம். கண்களுக்குள்ளும், புகைப்படக் கருவிக்குள்ளும் நாம் பெற்ற இன்பத்தை அள்ளிக் கொள்ளுகின்றோம். ஆனால், விடுமுறை கழிந்ததும் நாம் கண்டவை,அனுபவித்தவை அத்தனையும் கனவுபோலாகித் திரும்பவும் வழமையான வாழ்க்கைக் குள் நுழைந்து விடுகின்றோம். அது கனவு போலவே காட்சியளிக்கும். இவ்வாறுதான் வாழ்க்கையும் மகிழ்ச்சி, கடமை, கட்டுப்பாடு, உறவு, பகை, இன்பம், துன்பம் என்று சிலர் நீண்ட வருடங்களும், சிலர் குறுகிய வருடங்களும் இந்தப் பூமிப்பந்திலே வாழ்ந்து மறைந்து போகின்றார்கள். அவர்கள் கனவு வாழ்க்கை கலைந்து போகின்றது. மீட்டிப் பார்க்க முடியாத நிலையில் கரைந்து போகின்றார்கள்.

மூளையைச் சுழற்றிப் பார்த்தால், எதுவுமே நிஜமில்லை, நிரந்தரமில்லை, சொந்தமில்லை. விசன்புரோ கமராவின் மூலமாக வீட்டுக்குள்ளே இருந்த வண்ணம் பூங்காவுக்குப் போவதும், விளையாடுவதும், கடைகளுக்குப் போவதும் போன்ற ஒரு உலகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்.

மரத்தில் இருந்து விழுந்த இலைகள் மீண்டும் மரத்துக்குச் செல்ல எத்தனிப்பது போல கடந்து போன காலத்துக்குத் திரும்ப நாம் நினைப்போம். நாம் நடந்து திரிந்த பாதைகளிலே திரும்பவும் நடக்க எத்தனிப்போம். நாம் நடந்து வந்த அந்தப் பாதையிலே எத்தனையோ பேர் நடந்து தேய்ந்த பாதைகளாக இருக்கும். திரும்ப நினைத்தாலும் அது தரும் அனுபவங்கள் வேறுபாடாகவே இருக்கும்.

எது இன்று உன்னுடையதோ அது நாளை வேறு ஒருவருடையதாகிறது. மற்றொருநாள் அது வேறொருவருடையதாகிறது என்று கீதை சொல்கிறது. பூமியே எமக்குச் சொந்தமில்லை. நாம் விலை கொடுத்து வாங்கும் வீடா எமக்குச் சொந்தமாகப் போகின்றது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு வெறுங்கையுடனேயே எரிதழலுக்குள் போகவிருக்கின்றோம் என்பதை அலெக்ஸாண்டர் தன்னுடைய மரண ஊர்வலத்திலே வெறுங்கை வெளியே தெரியத் தன்னைத் தூக்கிச் சொன்ன சொற்களின் மூலம் உணர்த்தினார்.

ஒருவனின் ஒரு நாள் உணவு "நாழி" யளவென்பாரகள். நாட்களை அளந்துண்ணுகின்ற இயமன் கூட சூரியனை நாழியாகக் கொள்கிறான். மனிதனின் வாழ்நாளாகிய தானியத்தைத் தினம் தினம் அளந்து உண்ணுகிறான். உண்ண உண்ண மனிதனின் வாழ்நாள் குறைந்து கொண்டே வருகிறது. ஒரு நாள் ஒன்றுமே இல்லாமல் போய்விடுகிறது. இயமன் ஒரு மனிதனை உண்டு முடித்து விடுகிறான். இதனை

**நாலடியாரிலே இந்த ஆழமான வரிகள்**

**தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்**
**கூற்றம் அளந்துநும் நாளுண்ணும் – ஆற்ற**
**அறஞ்செய்து அருளுடையீர் ஆகுமின் யாரு**
**பிறந்தும் பிறவாதார் இல்.**

என எடுத்துக்காட்டுகின்றன.

இதுதான் நிஜமென்றால், அக்கண மகிழ்ச்சியை மனிதன் சொல்லிச் சொல்லித் தீரா வார்த்தைகளின் மூலமும், புகைப்படக் காட்சிகளின் மூலமும் வெளிப்படுத்தி மகிழ்கின்றான். இவைதான் பயணக்கட்டுரைகளாகவும், காணொளிகளாகவும், நூல்களாகவும் மீண்டும் தொடர் வோருக்குத் தந்து போகின்றன. அதனால், எது நிஜம்? எது நிரந்தரம்? எது சொந்தம்? அக்கண மகிழ்ச்சி மட்டுமே.







விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.








யேர்மனி வுப்பற்றால் நகரில் அமைந்திருக்கும் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் 01.06.2024 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்ற தேர்த்திருவிழாவில் இருந்து சில பதிவுகள்:
Foto: Mathan siva




## வெற்றிமணி ஆசிரியர் திரு மு.க.சு.சிவகுமாரன்!

# யாரும் அவருக்கு எதிரியல்ல, யாருக்கும் அவரும் எதிரியல்லர்





பொன். புத்திசிகாமணி (யேர்மனி)

1990ம் ஆண்டு முதன் முதலில் யேர்மனியில் இவரைச் சந்தித்தேன். அப்போது நான் கொக்சவலாண்ட் தமிழர் ஒன்றியத்தலைவராக இருந்தேன்.பாடசாலை போட்டி நிகழ்ச்சிக்கு நடுவராக கடமையாற றும்படி அழைப்பு விடுத்தோம்.எந்த மறுப்பும் சொல்லாது அந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பாகச் செயல்பட்டுத் தந்தார்.

உதவியென்று கேட்டால் மறுப்பேதும் சொல்லாது செயல் படக் கூடியவர். இவர் ஒரு கடின உழைப்பாளி.அவரது வட்சப்பிற்கு ஏதாவது குறுஞ்செய்தி அனுப்பினால் எந்த நேரம் என்றாலும் பதில் வரும்.அது சாமம் என்றாலும் பரவாயில்லை.

இவர் ஒரு உலகம் சுற்றும் வாலிபன். அவ்வாறே நான் இவரை அழைப்பதுண்டு. ஒரு சிரிப்புடன் கடந்து செல்வார்.அவர் சுற்றும் உலகத்தில் கலைநயம் தெரியும்,நல்ல காட்சிகள் விரியும்.அந்தந்த நாட்டைப்பற்றிய வரலாறு வெளிவரும்.

அவர் முதுகில் சுமந்து செல்லும் பயணப் பையில் எப்போதும் கமரா இருக்கும்.அவர் மனம் விரும்பும் காட்சிகளை படமாக்கி மகிழ்வார்.அவர் மகிழ்வதை நாம் ரசிக்க பதிவுகளாக்கித் தருவார்.

அவை பலவடிவங்களில் கதையாக,-கட்டுரையாக குறுஞ்செய்தியாக வெளிவரும்.சம்பவங்கள் சுவையாக இருக்கும். நகைச்சுவைப் பிரியன் இவன்.எனக்கும் அது மிகவும் பிடிக்கும். நான் பிறந்த வன்னி மண்ணில்,தான் வாழ்ந்த அனுபவத்தைச் சொல்லுவார். அன்னையும்,தந்தையும் ஆசிரியர்கள் என்பதால் சிறுவயதில் அவர்கள் செல்லும் பாடசாலைகளுக்கு இவரும் செல்லுவார்.

வன்னியில் காதலியார் சம்மளங்குளம் என்ற ஊரை உங்களுக்குத் தெரியுமா என்று என்னை ஒருமுறை கேட்டார்.

நான் அங்கே கொஞ்சக்காலம் வாழ்ந்திருக்கிறேன் என்றார்.செந்நெல் விளையும் வயல் வரப்பால் நடந்து சென்றே எங்கள் குவாட்டர்சுக்குப் போகவேண்டும்.அங்குதான் தந்தையும்,தாயும் ஆசிரியர்களாக சில வருடங்கள் கடமையாற்றி இருந்தார்கள். அந்த வேளையில் அவர்களுடன் வாழ்ந்திருக்கிறேன்.பால்,தயிர்,நெய்,தேன், நெல்,இறைச்சியென்று எதற்கும் குறை வில்லை.வன்னி வளம் நிறைந்த மண். அங்கு வாழும் மனிதர்களும் மரியாதை தெரிந்தவர்கள்.

அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அப்படி ஒரு மரியாதை தருவார்கள்.சின்னவதில் பெற்றோர்களுடன் சேர்ந்து நானும் இந்த இன்பத்தை அனுபவித்திருக்கிறேன். எங்களுக்கு தண்ணீர் ஊற்றில் ஒரு அச்சகம் இருந்தது."சக்தி அச்சகம் என்று அதற்குப் பெயர் என்றார்.

அது இவர்களுடையது தான் என்பது அப்போது எனக்குத் தெரியாது.நானும் சின்னவயதில் பல முறை நோட்டீஸ் அடிப்பதற்காக அந்த அச்சகத்திற்குப் போயிருக்கிறேன்.வேலை செய்தவருடன் எனக்குப் பழக்கம் இருந்தது.அவருடன் சேர்ந்து எழுத்துகளைத் தேடிக் கொடுத்திருக்கிறேன்.இவற்றையெல்லாம் அவர் சொல்லும்போது நான் நன்றாக ரசிப்பேன். நான் பிறந்த மண்ணல்லவா!

நாம் பிறந்த மண்ணை அடுத்தவர் சொல்லிப் புகழும் போதுதான் மனம் மகிழ்ச்சி கொள்ளும்.இவர் மூலம் இதனை நான் அனுபவித்தேன். வெற்றிமணி ஆசிரியர் பன்முகத் திறமை கொண்டவர் என்பதை பல முறை சொல்லி இருக்கிறேன். இவர் ஒரு ஓவியர்,சிற்பக்கலைஞர்,எழுத்தாளர், பத்திரிகை ஆசியர்,விமர்சகர்,பாடலாசிரியர் குறும்படத் தயாரிப்பாளர், இயக்குனர் என்று பல பரிணாமம் எடுத்தவர்.தனது குடும்பத்தினரையும் இதற்குள் ஈடுபடவைத்து மகிழ்ந்து வருபவர்.

இவரால் பலர் எழுத்தாளர்களாகி இருக்கிறார்கள்.பல எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெற்றிமணி வெளியீடாக நூலாக வெளிவந்திருக்கின்றன.இந்த வருடம் இருபத்தெட்டாவது வெளியீடாக பெண் எழுத்தாளர் கரிணியின் "வைகல்"நூலை வெளியீடு செய்திருந்தது.இவர் வெற்றிமணிக்காக தொடர்ந்து எழுதிவருபவர்.புத்தக ஆக்கம்,முதல் வெளியீட்டு நிகழ்வு வரை அத்தனை செலவையும் வெற்றிமணியே ஏற்றுக்கொண்டது.புத்தகவிற்பனை பணம் அத்தனையும் ஒரு சதம் குறையாமல் என்னிடமே தந்தவர் வெற்றிமணி ஆசிரியர் என்று பெருமையாக என்னிடம் சொன்னார் எழுத்தாளர் திருமதி கரிணிக் கண்ணன் அவர்கள். முப்பது வருடங்கள் புலம் பெயர்ந்த நாட்டிலிருந்து ஒரு பத்திரிகையை இவர் நடாத்துகிறார் என்றால் அதற்குரிய செயற்திறனை மனம் திறந்து பாராட்டலாம்.

28 ஆம் பக்கம் பார்க்க...









விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# நெஞ்சத்து அகம் நக

## கடுகுமணி:

திருவள்ளுவர் நட்பு என்பது கண்ட இடத்தில் மாத்திரம் முகத்தை மலரவைப்பது அல்ல. அது அன்பாலே முகம் மாத்திரமல்லாமல் அகமும் மலர நட்பதே ஆகும் என்பர். முகம் மலர்வதை நாம் காணமுடியும். அகம் அல்லது உள்ளம் மலர்வதை நாம் எப்படிக் காணலாம்? அல்லது உணரலாம்? இப்படியான ஒரு சிக்கலுக்கு திருவள்ளுவர் ஏற்கெனவே ஒரு நல்ல மறுமொழி சொல்லியிருக்கிறார்.

அன்பு என்பதை ஆட்டைக் காட்டுவது போலவோ மாட்டைக் காட்டுவது போலவோ காட்டமுடியுமா என்றால் 'முடியும்' என்கிறார் வள்ளுவர். அன்புக்கும் துன்புக்கும் அடையாளம் அல்லது சான்று கண்ணீர்தான் என்பதை,

**"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்நீர் பூசல் தரும்" (71)**
**என்னும் குறளாலே கூறியுள்ளார்.**

எனினும்


**"முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு" (788)**

என்பதில் அகம் நகுவதை நாம் எப்படி உணரலாம்? உள்ளமாகிய தாமரைப் பூ இறைவனுக்காக மலருமாம். அவ்வாறு மலருவதைக் கூப்பிய கைகள் வெளிப்படுத்தும். நாட்ட விழிகள் மேலும் அதனை வெளிப்படுத்தும்.

இது சுவாமி விபுலாநந்தர் சொன்ன விளக்கம். உள்ளத்தைத் தாமரைப் பூவாக எண்ணுவது கீழைத்தேசப் பண்பாட்டுக் கூறாகும். அப்படியாயின் அகம்நக என்றால் சிரிக்கும் தாமரைப்பூ எனக் கூறலாம். நட்புடன் தாமரைப்பூவினைத் தொடர்புபடுத்தி காளிதாசன் என்னும் வடமொழிப் புலவன் மேகதூதம் என்னும் இலக்கியத்திலே

"இதழ் விரியும் தாமரைப்பூவினுள் தேனும் மகரந்தமும் சேர்ந்த பாணி" என்று கூற வந்தவன் அப் பாணியினை "மைத்திரி கக்ஷாய" என்று சொல்கிறான். "நட்புப் பாணி" என்று பொருள். இந்த நட்புப் பாணி இனிப்பைத் தரும். புதிய உயிர்ப்பைத் தரும். அழகான சூழலைத் தரும். எனவே, சிரிக்கும் உள்ளமாகிய தாமரைப்பூ நட்புப் பாணியுடன் அமையின் எவ்வளவு நல்லாயிருக்கும்!





தகைசால் பேராசிரியர்
**அ.சண்முகதாஸ்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்



கொழும்பு,கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் 190 ஆவது வருடாந்த திருவிழா அண்மையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. இதன்போது புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி ஆலயத்திலிருந்து புறப்பட்டதைக் காணலாம்.



## தொலைத்த இடத்தில் தேடுவோம்- 04





# இது உறங்க விடாத சுடலைமாடன் கதை

கந்த கெட்டிய கண்டியிலுள்ள ஓர் தேயிலைத்தோட்ட மலையாகும்.. 150 வருடங்களுக்கு முன்னர் அங்கு கொண்டுவரப்பட்ட தமிழ் நாட்டு மக்கள் தம்மோடு தம் பண்பாட்டையும் கொண்டு வந்தனர்.கால ஓட்டங்கள் அவற்றில் பல மாற்றங்களை ஏற்படுத்தினும் இன்றுவரை தொடர்ச்சியாகச் சிலவற்றைப் பேணியும் வருகின்றனர் அதனுள் ஒன்றுதான் சுடலை மாடன் வழிபாடு.

கந்தகெட்டிய மஹாவித்தியாலய அதிபர் ராஜகோபால்அர்ப்பணிப்புமிக்க அதிபர், மலையக அடிமட்ட மக்கள்மீதும், அவர்களின் கலைகள் மீதும் அனுதாபமும் ஆர்வமும் கொண்டவர் அவர் தனது பாடசாலை நாடக விழாவுக்கு விருந்தினராக என்னை அழைத்து இருந்தார்.'சேர் சுடலை மாடன் வில்லுப்பாட்டு நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும்' என்றார். ஏற்கனவே காமன் கூத்து அருச்சுனன் தபசு பொன்னர் சங்கர் ஆகிய மலையக நிகழ்த்துகைக் கலைகளைப் படித்தும் பார்த்தும் இருந்த நானும் அதனைப் பார்க்க விரும்பினேன். சுடலை மாடன் வில்லுப்பாட்டு பார்க்க் காகல மடவல டிவிசன் நலந்தன்ன எனும் மலைக்கு அழைத்துச் சென்றார்.வளைந்து வளைந்து செல்லும் மலைப்பாதையூடாகச் சென்ற வேன் ஓரிடத்தில் நின்றது நின்ற இடத்திலிருந்து மேல் நோக்கிச்சென்ற படிக்கட்டுகளூடாடே ஏறிச் சென்று மிகச் சிறிய ஒரு கோவிலை அடைந்தோம். அக்கோவில் ஒரு பெரிய அகன்ற வாகை மரத்தின் கீழ் அமைந்திருந்தது.அது ஒரு மிகசிறியதோர் கிராமியக் கோவில். அக்கிராமச் சனங்கள் எங்களை எதிர் நோக்கிக் காத்திருந்தனர். கோவில் விக்கிரகங்களாகக் கன்னங்கரேல் என்ற இரு உருவங்கள் இருந்தன..

அது ஒரு மாடசாமி கோவில்.

கோவிலின் முன் வில்லுப்பாட்டுக்குரிய ஒரு பெரிய வில் இருந்தது. மக்கள் எங்களுக்கு வணக்கமுரைத்தார்கள் வில்லுப் பாட்டுப் பாடப்போகும் பாடகர்களும் வாத்தியக் காரர்களும்முதலில் கோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள். திருநீறு சந்தணம் வழங்கப்பட்டது.

'சுடலைமாடன் பிணம் தின்னும் ஒரு தெய்வம். சுடலைக்குச் சென்று புதிய பிணங்களைத் தோண்டியெடுத்து அப்பிணங்களின் உடலைப் பிழந்து பிணத்தின் குடலை மாலையாகப் போட்ட படியும் பிணத்தின் உள்ளுறுப்புகளைச் சாப்பிட்டுக் கொண்டும் வந்து தன்னை அது மக்கள்மத்தியில் நிரூபித்துக்கொள்ளும்' என ஒருத்தர் கூறினார்.'21 வகையான மாடன்கள் இருக்கிறார்கள்'என்று சுடலை மாடன் பற்றி எனக்கு விளக்கம் அளித்தார். என்னருகில் இருந்த இன்னொரு



பேராசிரியர் சி.மௌனகுரு

பெரியவர். 'பல மாடன்கள் உண்டு சப்பாணி மாடன் நொண்டிமாடன்,சுடலை மடன் என மாடன் வகையியினை ஒரு பட்டியல் தந்தார் இன்னொரு பெரியவர்.

'முன்னாளில் எங்களின் இந்த ஊரில் மாடன் திருவிழா ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்துக்கு முன் ஒரு பிணம் கட்டாயம் விழும் அப்புதுப் பிணத்தின் குடலைத்தான் மாலையாகப் போட்டுக்கொண்டும் பிணத்தின் உள்ளுறுப் புக்களைச் சாப்பிட்டுக் கொண்டும் மாடசாமி இக்கோவிலுக்கு வருவார்' என்றார்'

இன்னொருவர் 'மாடனை இந்த மடச் சனங்கள் அன்று கேள்வி கேட்கப்போய் இந்த ஊருக்கு ஒரு பெரும் கொள்ளை வந்தது. நிறையச் சனம் செத்தது. பின் தமது தவறை உணர்ந்து மக்கள் மாடசாமியிடம் மக்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள அப்பெரும் கோள்ளை நோய் நீங்கியது'என்று இன்னொருவர் கூறினார். 'பின்னாளில் மக்கள் பக்தியுடன் மாடசாமியிடம் பிணத்தின் குடலை மாலையாகப் போட்டுக் கொண்டு வருவதைக்காணப் பெண்களும் பிள்ளைகளும் பயங் கொள்கிறார்கள். எனவே பிணத்தின் குடலோடு வர வேண்டாம் என வேண்ட பிணத்திற்குப்பதிலாக மாடசாமி கோழியின் குடலை போட்டுக்கொண்டு வருவதும் கோழியின் உள்ளுறுப்புகளைச் சாப்பிட்டுக்கொண்டு வருவதும் வழக்கமாயிற்று' என்றார் இன்னொருவர்.

மாடசாமிபற்றி மக்கள் நம்பிக்கையின் புற உரு இவ்வாறு எனக்கு அவர்களால் தரப்பட்டது.

அச்சாமி பற்றி எனக்குள்ளும் ஒரு படிமம் உருவாகியது. மாடசாமி வில்லிசைக் குழு பற்றி அங்கிருந்த ஒருவரும் நிகழ்த்தினர்.வில்லுக்கு பக்தியோடு தூப தீபம் காட்டப்பட்டு அதுவும் ஒரு தெய்வநிலையில் வைத்துப் பூஜிக்கப் பட்டது. பங்கு கொள்ளும் அனைவருக்கும் வில்லுப்பாட்டுக்குழுத் தலைவர் திருநீற்றை நெற்றியில் இட்டார்.பக்தியோடு அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டனர். நம்பிக் கையும்,பக்தியுமே அங்கு மேலோங்கி நின்றது. மதம் என்பது நம்பிக்கைதானே.


வில்லிசைக் குழுவினர் பெரிய வில்லைச் சுற்றி அமர்ந்தனர்.உடுக்கடிக்கலைஞர்கள் இருவர்,குடம் வாசிப்போர் ஒருவர், தபேலா வாசிக்க ஒருவர்,பிரதான பாட்டுக்காரர் அவருடன் பாடப் பக்கப்பாட்டுக்காரர்கள் சிலர் என ஒரு பெரும் குழாம். சுடலை மாடன் கதை கதை வில்லுப்பாட்டு ஆரம்பமாகியது. பிரதான கதை சொல்லி மருதை என்பவரின் குரல் ஓங்கி ஒலித்தது. பாக்கியநாதன் என்பவர் தன் முழு உடலையும் அசைத்து அசைத்து ஆடியபடி உடுக்கு அடித்தார்.14 பேர் வில்லைச் சூழ அமர்ந் திருந்து பக்கப்பாட்டுப் பாடினர். பிரதான பாடகர் பாடகர் பாட இவர்கள் ஆம் ஐயா,ஆம் ஐயா என்றுதொடர் குரல் எழுப்பினர்அனைவரின் இணைவும் குரல் ஓசையும்,உடுக்கு ஒலியும்பாடல் மெட்டும் ஒருவித லய உணர்வைத் தந்து கொண்டிருந்தன..அந்த லயத்துக்குள் நாம் அனைவரும் ஈர்க்கப் பட்டோம்.

.எமது உடல்களும் தாள லயத்துக்கு அசைந்தன.திடீரென ஒருவருக்கு பெரும் உரு வந்து விட்டது.இரண்டு கைகளையும் தரையில் அடித்து புரண்டு தவழ்ந்து ஆடியபடி அவர் கோவிகுக்குள் சென்று மாடசாமி உடை அணிந்து வெளியில் வைத்திருந்த மணிகட்டிய பெரும் தண்டமொன்றைக் கையில் எடுத்துக் கொண்டு, நீண்ட சாட்டைக் கயிறொன்றைத் தனது தோழைச் சுற்றிப் போட்டுக் கொண்டு தாளத்துக்கு ஏற்ப காலடி வைத்து ஆடியபடி கோவில் வீதியில் கம்பீர நடை பயில ஆரம்பித்தார்.

" மாடன் வந்துவிட்டான்" 'என்றார்கள்.




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



# எதில் முழுமை?

வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் தம் வாழ்க்கையின் நிறைவு தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் இருக்கும். ஒருவர் தம் வாழ்வின் குறிக்கோள் இதுவெனக் கொள்ளுகையில் அது வேறொருவருக்கு ஒன்றுமேயில்லாததாகவோ, முட்டாள்தனமாகவோ, பெரிய பற்றியமாகவோ தோன்றலாம்.

யாருக்கும் பாரமாக இல்லாதவரை, யாரையும் எம் முடிவுகளும் செயல்களும் துன்புறுத்ததாவரை, எம் எண்ணங்கள் தீயவழியில் செல்லதாவரை அவரவர் தேர்ந்தெடுக்கும் சரியான பாதையே அவர்கள் வாழ்வை முழுமையடைய வைக்கிறது.

சிலருக்குப் பயணங்கள், சிலருக்கு வேலை, சிலருக்கு குடும்பத்தின் மகிழ்ச்சி, சிலருக்குத் தனிமை, சிலருக்குத் தேடல் என ஒவ்வொருவரது வாழ்வும் ஏதோவொன்றை நோக்கியே பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது. எதில் அவர்கள் வாழ்வை முழுமை பெறுகிறது ,எதில் அவர்கள் திருப்தியடைகிறார்கள் என்பது அவரவர் எதிர்பார்ப்பைப் பொறுத்தது.

கட்டமைக்கப்பட்ட சமூக அமைப்பில் கல்வி, வேலை,திருமணம், குழந்தைகள், சொத்து என்பனவே முழுமையான வாழ்வாகப் பார்க்கப்படுகின்றது. குறிப்பிட்ட வயதிற்குள் இதையெல்லாம் அடையாதவர்கள் பரிதாபத்திற்குரிய பாவப்பட்டவர்களாகவே இந்தச் சமுதாயம் எண்ணிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய நெருக்கடிகளில் சிக்கித் தம் வாழ்வை முழுமை பெறவில்லை என எண்ணித் தவிப்போருக்காகவே இதை எழுதுகிறேன்.வாழ்வின் முழுமையென்பது உங்கள் சிந்தனையிலும் செயலிலுமே பிறக்கின்றது.நீங்கள் நினைக்கும் எட்டாக் கனியான முழுமை மற்றொருவருக்கு உயிர் குடிக்கும் நச்சுக் கனியாகிறது.

சிலருக்குத் திருமணம் கனவாக இருக்கும்போது சிலருக்கு அந்த பந்தத்தை முடிப்பதுவே கனவாகிறது. உறவுகளோடு வாழ்தல் சிலருக்குக் கனவாகும்போது தனிமையில் வாழ்தலே சிலருக்கு வரமாகிறது.சிலருக்குப் பணம் சேர்த்தலே கனவாகும்போது சிலருக்குப் பயணங்களே கனவாகிறது. சிலருக்குக் கல்வி கனவாகவிருக்கும்போது சிலருக்குக் கல்வி தாண்டிய கற்கைகள் கனவாகின்றது.

இதில் எது குறித்து நீங்கள் வருந்துகிறீர்கள். இந்தச் சமூகம் வாழ்க்கை குறித்துக் குத்தியிருக்கின்ற முத்திரை உங்கள் வாழ்வில் செல்லுபடியாகவில்லையென்றா அல்லது நீங்கள் உங்களுக்காகச் சுமந்தலையும் முத்திரை உங்கள் வாழ்வில் குத்தப்படவில்லையே என்பதற்காகவா? இந்தச் சூழலும் மனிதர்களும் உங்கள் வாழ்க்கை பற்றிய புரிந்துணர்வின்றித் தேடல்களிலும் தேர்வுகளிலும் கருத்துச் சொல்ல முயற்சிக்கும்போதெல்லாம் கவலை கொள்வதிலிருந்து உங்களை விடுவித்துவிடுங்கள்.



பொலிகையூர் ரேகா
(இங்கிலாந்து)

அவர்கள் கூறும் ஆலோசனைகளோ விமர்சனங்களோ உங்களை முழுமையடைய வைக்கிறதா உங்கள் வாழ்க்கை குறித்த தேர்வுகளை முழுமையடைய வைக்கிறதா என்பது குறித்து நன்கு ஆராய்ச்சி செய்யுங்கள்.

உங்கள் உள்ளம் கூறும் பாதையின் மேல் கால்களைப் பதியுங்கள். சமூகக் காரணங்களுக்காக உங்களில் வலிந்து சுமத்தப்படுவனவற்றை நனைத்துச் சுமக்காதீர்கள். இவை ஒருபோதும் உங்கள் நிம்மதியை அழகாக்கப்போவதில்லை.

யாரோ ஒருவர் கூறும் வார்த்தைகள் உங்கள் கனவுகளைக் கலைக்குமாயிருந்தால் அவர்களை உங்கள் வாழ்வும் தோட்டத்தின் களையாக எண்ணி விலக்கிவிட்டு உங்கள் கனவுகளைத் தொடருங்கள். என்றேனுமொரு நாள் உங்கள் வாழ்வை முழுமை பெறட்டும்.









# பனைத் திருவிழா




யாழ்ப்பாணம் சுழிபுரம் திருவடிநிலையில் பனைத் திருவிழா எனும் தொனிப் பொருளில் விசேட செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.குறித்த நிகழ்வு நேற்றைய தினம் (26.05.2024) இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில், பனை சார் உணவு பொருட்கள் உற்பத்தி, பனை சார் உரையாடல்கள் மற்றும் நாடகங்க ளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. யாழில் இடம்பெற்ற பனைத் திருவிழா Palm Festival In Jaffna- அதிகளவான சுற்றுலா பயணிகள் இதன்போது கலந்து பயன்பெற்றுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் மற்றும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.





# துட்டுக்கு ரெண்டு கோட்டைப் பாக்கு

இப்பிடித்தான் London போய் ஆறு மாசத்தில, "டேய், கார் வாங்கீட்டாய் தானே,சனி ஞாயிறு வேலை இல்லாட்டி வீட்ட வா" எண்டு சஞ்சீவ் சொல்ல , சரி எண்டு சொல்லீட்டு காஞ்சு போன வாய்க்கு வீட்டுச் சாப்பாட்டு கிடைக்கிற அவாவில வெள்ளிக்கிழமை வெளிக்கிட்டு எப்பிடி வாறது எண்டு வழி கேட்டால், உப்பிடியே Gantshill roundabout ஆல நேர வந்து A 406 எடுத்து அடுத்த roundabout இல மூண்டாவது exit எடுத்து அப்பிடியே north circular ஆல வந்து பிறகு அடுத்த roundabout ஐஞ்சாவது exit ஆல வெளீல வந்து எண்டு சொல்ல, ஊரில இருக்கிற சந்தி மாதிரி இருக்கும் எண்டு நெச்சு இருக்கிற roundabout பேரை எல்லாம் பாடமாக்கீட்டு, வடிவா விளங்காட்டியும் ஆரையும் கேட்டாவதூ போகலாம் எண்டு நெச்சபடிக் காரை எடுத்துக் கொண்டு வெளிக்கிட்டன். முதலாவது roundabout இலயே exit எடுக்கத் தெரியாமல் சுத்துசுத்தெண்டு சுத்தீட்டு வழி கேக்க வழி ஒண்டுமில்லாமல் தட்டுத் தடுமாறித் திரும்ப, சந்தேகத்தில மறிச்ச பொலிஸ்காரனுக்கு விளக்கம் குடுத்திட்டு அவன்டையும் வழி கேட்டாப் பாவம் அவனுக்கும் சொல்லத் தெரியேல்லை, Map ஐப் பாத்துக்கொண்டு போகச் சொன்னான். திருப்பி வீட்டை வந்து காரை விட்டிட்டு வரடிந எடுத்து harrow க்குப் போனன்.

அப்ப தான் ஊரின்டை அருமை விளங்கிச்சுது ஒரு நாளும் போகாத ஊருக்கு கூட "அண்ணை அராலிக்கு எப்பிடிப் போறதெண்டு" town ல கேட்டால் சந்திக்குச் சந்தி ஒருத்தன் எங்களுக்கெண்டே நிப்பான் வழி சொல்ல. "சத்திரத்துச் சந்தியால நேர போய் அப்பிடியே மனோகராச் சந்தியால திரும்பிப் போனா வாற ஐஞ்சு சந்தியால வலது பக்கம் திரும்பி ஓட்டுமடச் சந்தியால இடது பக்கம் திரும்பி நேர போங்கோ"எண்டு easyயாய் சொல்லுவாங்கள். இல்லாட் டியும் இதுக்கெண்டே ஒவ்வொரு சந்தி வழியவும் சாரத்தோட பேப்பர் வாசிச்சுக்கொண்டு ஆராவது இருப்பினம், வழி கேட்டுக் கேட்டுப் போக. அதோட ஊருக்க போய் ஆரின்டையும் பேரைச் சொல்லிக் கேட்டால் வீட்டடீல கூட்டிக்கொண்டு போய் விட்டிட்டு வீட்டுக்காரரை கூப்பிட்டும் விடுவினம். ஊருக்க போய் வீட்டைக் கண்டு பிடிச்சு வாசலில நிண்டு பேரைக் கூப்பிடவும் முறை இருக்கு.

பொதுவா ஆச்சி, அப்பு, ஐயா எண்டு கூப்பிடி றது, இல்லாட்டிச் சொந்தம் எண்டா முறையைச் சொல்லிக் கூப்பிடலாம். மனிசிமார் புருசன்டை பேரைச் சொல்லாத மாதிரித தான் வீடு வழிய போய் பேரை நேர சொல்லிக் கூப்பிடீறதோ இல்லாட்டி சபை சந்தீல கதைக்கேக்கயோ பேரைச் சொல்லுறதோ குறைவு. வீட்டுக்கும் , ரோட்டுக்கு ஒரு அடையாளம் மாதிரி ஊருக்க இருக்கிற ஆக்களுக்கும் பேரோட ஒரு அடைமொழி அடையாளமாய் இருக்கும். அப்ப பேருக்குப் பஞ்சம் எண்டதாலயோ இல்லாட்டி Numerology தெரியாததாலயோ ஊர் வழிய ஓரே பேரில கன பேர் இருப்பினம். அதோட வயசுக்கு மூத்த ஆக்களுக்குப் பேரைச்சொல்லிக் கூப்பிடிறது சரியில்லை எண்டு ஒரு மரியாதைக்கும் தான் இப்படி அடைமொழியோட கூப்பிடுறது எண்டு நெக்கிறன்.



**Dr.T. கோபிசங்கர்**
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

அடைமொழிக்கு வைக்கிற பேர் அநேமா அவரின்டை வேலை சார்ந்ததா இருக்கும். புரோக்கர் பொன்னம்பலம், பரியாரி பரமசிவம், கிளாக்கர் கனகசபை, CTB சிவலிங்கண்ணை எண்டு தொழிலோட பேர் இருக்கும். பிசினஸ் செய்யிற எல்லாருக்கும் ஒரே வேலை எண்டதால வேலைக்குப் பதிலா அவை வேலை செய்யிற இடங்களைச் சேத்துச் சொல்லிறதும் இருந்தது. இது அநேமா சிங்கள ஊரா இருக்கும். காரைநகர் பக்கம் தான் சிங்கள ஊர் அடைமொழி கனக்கப்பேருக்கு இருந்தது. வெலிகம பொன்னம்பலம், தங்கொட்டுவ தணிகாசலம், களுத்துறை கனகலிங்கம் எண்டு ஒரு கேள்விப்படாத ஊரில போய் வியாபரம் தொடங்கி ,நளவயடிடளைா பண்ணி அந்த ஊர் பேரை ஒட்டிக் கொண்டு வந்து பேரையும் பிறந்த ஊரையும் பெருமைப்படுத்தின கன பேர் இருந்தவை.

என்டை மச்சான் ஒருத்தனைப் பள்ளிக் கூடத்தில அப்பப்பான்டை பேர் என்ன எண்டு கேக்க PM எண்டு சொல்லி இருக்கிறான், குழம்பிப்போன ரீச்சர் திருப்பி விசாரிக்க, " ஓம் வீட்டை வாறவை எல்லாம் PM நிக்கிறாரோ எண்டு தான் கேக்கிறவை" எண்டு சொல்லத்தான் ரீச்சருக்கு விளங்கிச்சுது postmaster தான் PM ஆனவர் எண்டு. ஓவசியர், Chairman, SM ( station master ) எண்டு தொழிலே பேராகி பேர் மறக்கப்பட்ட ஆக்களும் இருந்தவை.

பெருமைக்கு ஊரைச்சேக்கிற ஆக்களும், ஊருக்கு பெருமை சேக்கிற ஆக்களும் எண்டு ரெண்டு பேரும் பேரோட ஊரைச் சேப்பினம்.

ஊரில தன்னைத் தானே பெருமையா நினைக்கிறது St John's கொலிஜ் காரருக்கு மட்டும் இல்லை முழு யாழ்ப்பணத்தானுக்கும் இருந்தது." பருத்தித்துறை ஊராம் பவளக்கொடி பேராம்" எண்டு பாடின கல்லடி வேலுப் பிள்ளையார், ஆடிப்பிறப்பிக்கு பாடின நவாலியூர் சோம சுந்தரப்புலவர்

28 ஆம் பக்கம் பார்க்க...




விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

27 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## துட்டுக்கு ரெண்டு

எண்டு,கவிஞனும் சரி கவிதையும் சரி ஊர்ப் பேரோட தான் இருந்தது.

ரோடுகளுக்கு ஆக்களின்டை பேர் இருந் தாலும் ஊர் வழிய சந்திக்கு ஆக்களின்டை பேர் வைக்கிறேல்லை. பெரிய சந்திகள் ஊரின்டை பேரிலேம் மற்றச் சின்னன் களுக்கு மரத்தின்டை பேரோட புளியடி, இலுப்பையடி இல்லாட்டி ஒரு கட்டிடம் இருந்தா அந்தப் பேரோட மடத்தடி, கச்சேரியடி, மனோகராத் தியட்டரடி எண்டோ இல்லாட்டி குளத்தையோ, கோயிலையோ அதில இருக்கிற வைரவரையோ, பிள்ளையாரை யோ, மாதா கோவிலையோ சேத்துத் தான் பேர் வைக்கிறது.

எங்கடை ஒரு ஊரில ஒரு சந்தி இல்லை ஒராயிரம் சந்தி. ஐஞ்சு சந்தி, நாச்சந்தி, முச்சந்தி, கெற்றப்போல் சந்தி எண்டு ஒவ் வொரு சந்திக்கெண்டு ஒரு காரணப் பேரும், இடுகுறிப் பேரும் அதுக்கெண்டு ஒரு சிறப்பும் இருக்கும். அதோட எங்கேயும் சண்டை நடக கேக்கயும் சொல்லுவாங்கள் இது ஆரியகு ளம் சந்தி குறாப் , கொட்டடிச் சந்தி குறாப், கொய்யாத்தோட்ட குறாப், ஐயனார் கோவிலடி குறாப், இது பிரவுண் ரோட் குறாப் எண்டு.

பஸ் ஸில போகேக்க பெரும் பாலும்



சந்தீன்டை பேரைச் சொல்லித் தான் இறங்கி றது. ஊருக்குள்ள நிறையச் சந்தி இருந் தாலும் main bus route இல ஊரின்டை பேரோட ஒரு சந்தி இருக்கும். கொக்குவில், கோண்டாவில், இணுவில், உடுவில் எண்டு வாறது town,ல இருந்து போகேக்க ஊர் தொடங்கிற சந்தியா இருக்கும்.

Town க்கு போற பஸ் எல்லாம் KKS ரோட்டாலேம், பருத்தித்துறை ரோட்டாலேம் யு 9 ஆல வந்து ஆஸ்பத்திரீ ரோட்டாலேம் வர ஒரு பஸ் மட்டும் இந்த சந்தியால போறது, அது காரை நகரில இருந்து வாற 782 பஸ். ஸ்ரான்லி றோட்டால வந்து வெலிங்டன் சந் தீல திரும்பி town க்கு போகும். அதே போல மணிக்கூட்டுக் கோபுரத்தில இருந்து வாற றோட் தான் மணிக்கூட்டு கோபுர வீதி. அது முந்தி ஆசுபத்திரிக்கு குறுக்கால வந்து , ஸ்ரான்லி ரோட், நாவலர் ரோட் எல்லாம் தாண்டி பிறவுண் ரோட் வரைக்கும் வந்ததாம். முந்தி இருந்த GA Lionel Fernando தான் குறுக்கால ஆசுபத்திரி கட்ட விட்டவர் அதி ன்டை எச்சம் தான் இப்ப இருக்கிற மணி க்கூட்டு ஒழுங்கை. அதே போல சந்திக்கும் பழைய பேர் ஏதும் இருந்திச்சுதோ தெரியாது இப்ப அதுக்குப் பேர் வெலிங்டன் சந்தி.

Town மாதிரி பழைய வெலிங்டன் சந் தீன்டை நாலு மூலையிலும் கட்டடங்கள். வெலிங்டன் தியட்டர் ஒரு மூலை, முனீ ஸ்வரா கபேயும் கடைச்சல் பட்டறையும் மற்ற மூலை,லிங்கம் கிறீம் கவுஸ் தெற்கை பாத்த வாசலோட, பிளவுஸில மட்டும் விட்ட அம்பை பெடியளின்டை காச்சட்டை பொக்கற்றிலும் விட்ட விக்ரம் டெயிலேர்ஸ் அதுக்குப் பக்கத் தில,எதிர கண்ணாடி விக்கிற S.M. Fernan do , அதையும் தாண்டிப் போக வழுறநச கூல் பார் எண்டு இருந்தது.

85 /86 கோட்டையில இருந்து செல்லுக ளும் பொம்பரும் நியூ மாக்கட்டையே இல்லா மல் பண்ண, செல்லுக்கெட்டிய தூரம் தாண்டி சனங்கள் பிழங்கத்தொடங்கேக்க தான் இந்த மாற்றம் வந்தது. வருசம் பதினாறு குஸ்புவைப் பாக்க கள்ளமா ஒதுங்கின அதே வெலிங்டன் தியட்டர்ச் சந்தி. தொண்ணூறில CCA, science hall> science academy , new- master எண்டு கல்விச் சந்தியாகி மாறினதும் இதே சந்தி தான். மனிசி க்குப் பின்னால திரியேக்க வெலிங்டன் சந்தீல "அவள் வருவாளா" எண்டு பாத்து கொண்டிருந்தது லிங்கம் கடை மூலையில. தொண்ணூறுகளில யாழ்ப்பாணத்தின் tuition கொட்டில் எல்லாம் இருந்தது இந்த சந்தி தான்.

இதைப் போல ஒவ்வொரு சந்திக்கும் ஓராயிரம் கதை இருக்கும். அது ரோட் சந் திக்கிறதால மட்டுமில்லை ஆக்களும் சந் திக்கிறதால தான் சந்தி எண்டு எழுவாயும் பயனிலையும் சேந்ததா இருக்கு. இப்ப இருக்கிற ஊருக்கும் இருக்காத ரோடுக்கும் board எல்லாம் போட்டிருந்தாலும் எங் கயாவது போறதெண்டால் ஒரு சந்தீல நிப் பாட்டிக் "வட்டுக் கோட்டைக்கு வழி என்ன" எண்டு கேக்கிறாக்களுக்கு விடை " துட்டுக்கு ரெண்டு கொட்டைப் பாக்கு" எண்டு வழி சொல்லிறாக்களும் இருக்கினம் ஊரில.

23 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## வெற்றிமணி ஆசிரியர் திரு மு.க.சு.சிவகுமாரன்!

யாரும் அவருக்கு எதிரியல்ல,யாருக்கும் அவரும் எதிரியல்லர்.

எதனையும் புன்னகையோடு கடந்து சென்று கருமமே கண்ணாயினார். காலத்தி ற்குக் காலம் விழாக்களை ஏற்படுத்தி விருதும் விருந்துமாக எழுத்தாளர்களையும்,ஆதரவு வழங்குவோரையும் கௌரவித்து வருகிறார். நானும் சில விழாக்களில் கலந்து விருந் துண்டு மகிழ்ந்திருக்கிறேன். கலைத்துறை யில் படித்துப் பட்டம்பெற்று,சில வருடங்கள் ஆசிரியராகி பாடசாலைகளில் சேவை செய்து, புலம்பெயர்ந்து, தான் வாழ்ந்த யேர்மனி மண்ணைத் தளமாக்கி வெற்றி மணியை உலகத்தில் தமிழர் வாழும் பகுதிகளுக்கு ஒலிக் கச் செய்திருக்கிறார்.இது திரு சிவகுமாரன் அவர்களால் நிறைவேறி இருக்கிறது.

பெற்றோரை தெய்வமாக மதிக்கும் பண்பு,இறைபக்தி இவரிடம் இயல்பாக அமைந்திருக்கிறது.இவரது முயற்சிகளுக்கு இவரது குடும்பமும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.பத்திரிகை வளர்ச்சிக்கு இதுவும் முக்கிய காரணம் எனலாம்.

எழுத்தாளரை மதிக்கும் பண்பும்,அவர்களு க்குக் கொடுக்கும் ஊக்கமும்,நல்ல எழுத் தாளர்களை தமிழ் இலக்கிய உலகத்திற்கு வழங்கி இருக்கிறது. தமிழ்மொழிமீதும்,கலை, கலாச்சார விழுமியங்கள் மீதும் தீராத காதல் இவருக்குண்டு. வெற்றிமணி எப்போதும் அழகானது.அதன் வடிவமைப்பு வாசகர்களை வெகுவாகக் கவரக்கூடியது. நான் அறிந்த மட்டில் பெண்களே அதிகமாக வெற்றிமணிப் பத்திரிகையை விரும்பி வாசிக்கிறார்கள். நேரத்தைக் கருத்தில் கொண்டு ஆழ்ந்த கருத் துடன் சுருக்கமான ஆக்கங்களாக,அழகான வடிவமைப்புடன் தரக்கூடிய ஆற்றல் இவருக்குண்டு. இதுவும் வெற்றிமணி யின் சிறப்பு. என்னுடைய ஆக்கங்களையும் அங்கொன்றும் இங்கொன்றுமாக பிரசுரித்து மகிழவைத்து வருகிறார்.அவருக்கு எனது நன்றிகள்.

மென்மேலும் இப்பத்திரிகை வளர்ச்சியில் பல ஆண்டு விழாக்களை சிறப்பாகக் கொண் டாட வேண்டுமென்று நாமும் வாழ்த்துவோம். நன்றி.

07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## மொபைல் போன்கள்

கற்றுக் கொள்வது இன்றைய பெற்றோர் களின் மிகப்பெரிய கடமைதான். தவறே செய்யாமல் யாரும் இருக்க முடியாது. ஆனால் அந்தத் தவறுகள் பெரிதாகாமல் வழிநடத்த வேண்டும். அதற்காகப் பெற்றோ ர்களாகிய நமது கண்ணோட்டத்தை முதலில் விரிவு படுத்த வேண்டும். குழந்தைகள் மீது நிபந் தனையற்ற அன்பு செலுத்துதல் முக்கியம்.

பெற்றோர் வளர்ந்த சூழ்நிலையும், குழந்தைகள் வளரும் சூழ்நிலையும் நிச்சயம் வேறுபட்டுத்தான் இருக்கும். அவற்றை ஒன் றோடு இன்னொன்று ஒப்பிட்டுக்கொண்டு நம்மை நாமே குழப்பிக் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு குழந்தையும் தனித்துவம் மிக்கது. அவர்களை ஒருவரோடு இன்னொருவரைப் ஒப்பிட்டுப் பேசுவதை தவிர்க்க வேண்டும். வாழ்க்கையை எளிதாக எடுத்துக்கொள்ள கற்றுத் தர வேண்டும். மிக முக்கியமாக நம்மைப்பார்த்துதான் குழந்தைகள் ஒவ்வொன றையும் கற்றுக் கொள்கிறார்கள் என்பதை ஒவ்வொரு பெற்றோரும் எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

குழந்தைகளை ஒரு கூட்டுக்குள் அடைக் காமல், அவர்களை சமூகமயப்படுத்த வேண்டும். தொலைக்காட்சி மற்றும் இணைய வழி பிம்பங்களைத் தாண்டி அவர்களு க்கு மனிதர்களுடனான உரையாடல்களை ஊக்குவிக்கவேண்டும். பிள்ளைகளுக்கான நேரத்தை பெற்றோர்கள் அதிகப்படுத் தவேண்டும். பெற்றோர்களிடம் இருந்து குழந்தைகளும், குழந்தைகளிடம் இருந்து பெற்றோர்களும் கற்றுக்கொள்ள நிறையவே இருக்கும்.

இந்த நேரமின்மை நிறைந்த காலகட்டத் தில் இது நிறையவே கஷ்டம்தான் என்றாலும், வேறு வழியில்லை. ஏனெனில் நாம் எவ்வளவு சம்பாதித்தும் வேலையில்லை குழந்தைகளை ஒழுங்காக வளர்த்தெடுக்காவிட்டால் இல் லையா ?








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

# எங்களுக்குத்தான் இந்த வாழ்வின் மீதும் காலத்தின் மீதும் எத்தனை எத்தனை புகார்கள்??



சர்மிலா வினோதினி
(இலங்கை)



நிகழ்ச்சித் தயாரிப்பிற்காக வெளிக்கள பயணங்களை மேற்கொள்ளுகிறபோது கொளுத்தும் வெய்யிலிற்கு நடுவிலும் பல கணங்கள் அர்த்தப்பட்டு விடுவதுண்டு. அப்படி ஒரு சம்பவம் அன்றைக்கு ஒருநாள் நிகழ்ந்தது. ஆனிக்குரிய காற்று ஓகோ என்று வீசிக்கொண்டிருந்த முன்மாலை நேரம். எங்களுடைய ஒளிப்பதிவாளர் மும்முரமாக வேலையில் நிற்க கமராவை பார்ப்பதும் காட்சிகளை பார்ப்பதும் என்று நானும் என்பங்கிற்கு என்னுடைய வேலைகளை பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னால் இருந்து ஒரு குரல்.

என்ன எடுக்கிறீங்க?

ஆவலோடு கேட்கவே குரல் வந்த திசையை நோக்கி தலையையும் உடலையும் ஒன்றுசேர திருப்பினேன். சுமாரான உயரம்,அகன்ற குண்டுக் கன்னங்கள், ஆவல் நிறைந்த கண்கள், உடல் முழுவதையும் வியர்வை நனைத்திருக்க தளதளவென்று அணிந்திருந்த பழுப்பு நிற ரீசேட்,அரைக்காற்சட்டை, வியர்வையில் பிசுபிசுத்த கால்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒட்டியிருந்த தேங்காய்த் தும்பின் துகள்கள், இவை எல்லாவற்றின் அடையாளமாக நின்றுகொண்டிருந்த சிறுவனைப் பார்த்து புன்முறுவல் செய்தேன்.

அவனுடைய முகத்தில் இன்னும் கேள்விக்கான பதிலை தேடுகிற ஆர்வம் ஒட்டியிருந்தது, ஏறிய விழிகள் இறங்காமல் நின்றன. Record பண்ணுறம், இப்படி பதில்கொடுத்தேன்.

ஏன்?

ஒரு TV program எடுக்கிறம்

ஆ, சரி.

என்ன எடுக்க வேண்டாம்.

நிதானமாக வந்தன அவனுடைய பதில்கள்

சரி உங்கள எடுக்க மாட்டம். இப்படிச் சொல்லிக்கொண்டு பேச்சைக் கொடுத்தேன்.

என்ன செய்யிறீங்கள் இங்க?

நான் தேங்காய் உரிக்க வாறனான்,

அப்ப ஸ்கூலுக்கு போறேல்லயோ?

போறனான், போயிற்று வீட்டபோய் சாப்பிட்டிற்றுவந்து இங்க வருவன்.

ஒருநாளைக்கு இருநூறு தேங்காய் உரிப்பன். சரி ஒரு தேங்காய்க்கு எவ்வளவு தருவினம்?

மூண்டு ரூபா.

அவனுடைய கோலமும் பதிலும் நெஞ்சைப் பிசைவதைப் போல இருக்க மேலும் பேச்சுக்கொடுத்தேன், லாவ கமாக வந்து எனக்கு முன்னேயிருந்த சீமெந்து கட்டில் அமர்ந்திருந்தபடி கதைக்கத் தொடங்கினான்.

இப்பொழுது அவனுடைய கேள்விகள் என்னை நோக்கி வரத் தொடங்கின, அப்ப உங்களுக்கு எவ்வளவு சம்பளம் தருவினம்? உங்களுக்கு தாறமாதிரித்தான் எங்களுக்கும் தருவினம், சிரித்தபடி சொல்லிவிட்டு கதையை தொடர்ந்தேன்.

அது சரி, வீட்ட எத்தினபேர்?

கதையை தொடர்ந்தேன்.

நான், அம்மா, அண்ணா. இன்னும் ஒரு அண்ணா கழியாணம் செய்திற்றார்.



அப்பா? இது என்னுடைய கேள்வி.

அப்பா இயக்கத்தில இருந்தவர் இப்ப இறந்திற்றார். அம்மாதான் வீட்ட எல்லா வேலையும் செய்யிறவா.

அப்ப நீங்கள் வீட்ட இரவில படிக்கிற நீங்களோ? என்றபடி முகத்தை பார்த்தேன், இல்லை என்பதைப்போல உடலை நெளித்து புன்னகையை வீசினான்.

சரி ஸ்கூல்ல படிச்சு என்னவா வர விருப்பம்?

சில மணித்துளிகள் அவனிடம் ஒருவித அமைதி குடிகொண்டது, பின்னர் அதை தானே கலைத்துக்கொண்டு

வாறது வரட்டும்,

நான் சனி ஞாயிறு எண்டா முழுநேரம் இங்க வேலைக்கு வருவன், ஐந்நூறு தேங்காய் உரிப்பன்.

பதில் சொல்லவும், கணக்காக அந்த நேரம் அங்கு வந்த வேலை வழங்குனரை கேள்விக்குறியோடு பார்த்தேன்.

ஓம் உரிப்பான்.

சரி அப்ப நீங்கபோய் உங்கட வேலைய பாருங்க, இல்லாட்டி தம்பிக்கு கரைச்சல் எல்லோ

என்று நான் சொல்லவும்,நான் உரிச்சு முடிச்சிற்றன், எண்ணப் போறன். என்றபடி தேங்காய்களை தள்ளுவண்டிலில் ஏற்றியபடி முக்கித் தக்கி தள்ளிக்கொண்டு செல்லுவதை பார்த்தபடி கையசைத்தேன்.

தலையை சரித்து சிரித்தபடி எங்களை கடந்து போய்க்கொண்டிருந்தான் 13 வயதே நிரம்பிய அந்தச் சிறுவன்.

எங்களுடைய வீட்டில் தம்பி அம்மாவிற்கு தேங்காய் உரித்து கொடுக்காவிட்டால், எத்தின தரம் உங்களிட்ட கேக்கிறது?

இந்தாவிடு நான் உரிக்கிறன். என்று வெற்று வீறாப்போடு போய் வேர்த்து விறுவிறுக்க பத்து பதினைந்து தேங்காய்களை உரித்துவிட்டு பத்து நாளைக்கு கைகளை காட்டிக் காட்டி புராணம் பாடுகிற எனக்கு அவனுடைய பதில் காதுகளை விட்டு அகல நீண்ட நேரம் எடுத்ததில் பிழைகள் இல்லைத்தான்.

எங்களுக்குத்தான் இந்த வாழ்வின் மீதும் காலத்தின் மீதும் எத்தனை எத்தனை புகார்கள்?? ■




பிறீமன் வரசித்தி விநாயகர் ஆலயம்

கொடி: 09.08.2024
தேர்: 18.08.2024
Ilse Kaisen Str 24. 28327 Bremen.
Tel: 0421 247 966 58






M&M FAMILY
TOGETHER WE SHALL PREVAIL

வெற்றிமணியின் 30 ஆவது ஆண்டு நிறைவு இதழ் கண்டு மகிழ்கின்றோம்.

# யேர்மனி எசன் தமிழ் பாடசாலையில் சிறப்பாக நடைபெற்ற பேச்சு, சித்திர, தமிழ்த்திறன் போட்டிகள்















யேர்மனி தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம், எசன் தமிழ் பாடசாலையின் பேச்சு, சித்திர, தமிழ்த்திறன் போட்டி இன்று (01.06.2024, சனிக்கிழமை) சிறப்பாக இடம் பெற்றது. பல மாணவ மாணவிகள் பங்குபற்றி தங்கள் திறமைகளை வெளிப்படுத்தித்தினர்.

பாவனை மொழியும், வீட்டு மொழியும்,தமிழ் அல்லாத சூழலில், தமிழ் மொழி மீதான அக்கறையை பெற்றோர்கள் முதலில் மேம் படுத்த வேண்டும். பாவனை மொழி சாத்தியம் அற்றது, வீட்டு மொழியாக தமிழ் நிச்சயம் சாத்தியமே. சாதிப்போமா.

இன்றைய இந்நிலையிலும் பெற்றோர், மாணவர்கள், நிர்வாக உறுப்பினர்கள், என பலரது ஆதரவினால் நிகழ்ச்சியின் வெற்றி சாத்தியமானது.

**யாவருக்கும் வெற்றிமணி நல் வாழ்த்துகள்.**




DEVI FUNERAL SERVICE
Devi-Bestattungen

உறவுகள் பிரியும் போது
கவலைகளை சுமக்கின்றோம்

- உலகெங்கும் அனுப்பிவைத்தல்
- எரிக்கும் இறுதிச்சடங்குகள்
- நிலத்தில் தாக்கும் சடங்குகள்
- விசேட இறுதிச்சடங்கு வகைகள்
- சமூகப்பணத்துடனான இறுதிச்சடங்குகள்
- நாங்கள் ஈமைக்கிரியை சேவைகளை உங்களுக்கு அண்மையாக உள்ள இடத்திலிருந்தும் மிகவும் குறைந்த கட்டணத்திலும் வழங்குவோம்

OPEN 24 HOURS
7 DAYS

எமது சேவைகள்

devi-bestattungen.de
info@devi-bestattungen.de
015754292746

OPEN 24 HOURS 7 DAYS
ALL RELIGION RESPECTED

# விஜயுடன் நடிக்க விரும்பும் நடிகை



இந்தி சினிமாவில் பிரபலமான நடிகையாக இருந்து வருபவர் அனன்யா பாண்டே. இந்தியில் 80களில் பிரபல நடிகராக இருந்த சுங்கி பாண்டேவின் மகள்தான் அனன்யா.

அடிக்கடி வெளிநாடுகள் சுற்றுலா செல்லும் அனன்யா அங்கு பிகினி உடையில் நடத்தும் போட்டோஷுட்டுகளை காணவே இன்ஸ்டாகிராமில் அவருக்கு மில்லியன் கணக்கில் ரசிகர்கள் உள்ளனர். இந்தியில் பிரபலமான நடிகையாக இருந்து வந்தாலும் தென் இந்திய சினிமாக்களிலும் கால் பதிக்க வேண்டும் என அனன்யா பாண்டே விரும்புகிறார்.

இதற்காக சமீபத்தில் விஜய் தேவரகொண்டாவுடன் லைகர் படத்தில் நடித்தார். ஆனால் அந்த படம் தோல்வியை தழுவியது. ஆனாலும் அனன்யா தொடர்ந்து தென்னிந்திய சினிமாக்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார்.

இந்நிலையில் சமீபத்தில் பேட்டி ஒன்றில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது தென்னிந்திய சினிமாவில் எந்த நடிகருடன் நடிக்க விரும்புகிறீர்கள்? எனக் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் விஜய்யுடன் நடிக்க விரும்புகிறேன் என யோசிக்காமல் உடனே பதில் சொன்னார்.





# முத்துராமன்

அந்த காலத்தில் தமிழ் நாயகர்கள் பெரும்பாலும் நாடகப் பின்னணியில் இருந்து வந்தவர்கள். எனவே அந்த இலக்கணத்தின் படி, தனது முகபாவங்களை, உணர்ச்சிகளை சினிமாவிலும் மிகையாக கொட்டித் தீர்க்கும் பழக்கம் அவர்களிடம் இயல்பாக படிந்திருந்தது. அவ்வகையான நடிப்புதான் “சிறந்தது“ என்று கருதப்பட்ட காலமாகவும் அது இருந்தது.

ஆனால், தனது அடக்கமான, மிக இயல்பான நடிப்பின் மூலம் ஒரு புது இலக்கணத்தை ஏற்படுத்தியவர் முத்துராமன் என்றால் அது மிகையாகாது. 'Subtle acting' என்னும் பாணியை முத்துராமனிடம் அதிகம் காண முடியும். அது மிகவும் உணர்ச்சிகரமான காட்சியாக இருந்தாலும் சரி, அதிகம் கொட்டி விடாமல், தேவைக்கேற்ற அளவான உணர்ச்சியை மட்டும் வெளிக்காட்டி நடிப்பதில் முத்துராமன் தனித்துவம் கொண்டவராக இருந்தார்.

“நடிச்சா ஹீரோவாதான் நடிப்பேன்“ என்றெல்லாம் பிடிவாதம் பிடிக்காமல் இரண்டு ஹீரோக்களில் ஒருவர், நாயகிகளுக்கு முக்கியத்துவம் இருக்கும் கதை என்று பல்வேறு பாத்திரங்களில் நடித்து ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்தார். “நெஞ்சில் ஓர் ஆலயம்“, “காதலிக்க நேரமில்லை“, “சர்வர் சுந்தரம்“ “பாமா விஜயம்“, “சூர்யகாந்தி“, “எதிர் நீச்சல்“ போன்ற திரைப்படங்களில் கவனத்திற்கு உரிய பாத்திரங்களில் நடித்தார். தெளிவான உச்சரிப்பு, அலட்டிக் கொள்ளாத இயல்பான நடிப்பு, வசீகரமான தோற்றம் போன்ற காரணங்களினால் தனித்துத் தென்பட்டார்.

ஜெமினி கணேசன், முத்துராமன் போன்ற “சாமானியர்களின் நாயகர்களாக“ திகழ்பவர்களின் பலமே அவர்களின் இயல்பான நடிப்புதான். ஹீரோவிற்கான பிம்ப சிலுவைகள் இல்லாத காரணத்தால் எந்தவொரு வேடத்திலும் அவர்களால் இயல்பாக உள்நுழைந்து விட முடியும். பொதுவெளியிலும் இவர்கள் செயற்கையாக எவ்வித பாவனைகளையும் செய்ய வேண்டிய கட்டாயமும் நெருக்கடியும் இல்லை. இது போன்ற நடிகர்கள், சினிமாவை தங்களுக்கான முதலீடாக மாற்றிக் கொள்ளாமல் நடிப்பை மட்டுமே பிரதானமாகவும் தொழிலாகவும் வைத்துக் கொண்டு வாழ்ந்து மறைந்தார்கள். சினிமாவின் மூலம் கிடைக்கும் புகழ், செல்வாக்கு போன்றவற்றை மற்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ள முயலவில்லை என்பதே நிதர்சனமான உண்மை ஆகும்!!



# கமல் படம் என்பதால் நடிக்கவில்லை

தமிழ் சினிமாவில் அறிமுகமே ரகுல் ப்பீத் சிங்குக்கு பெரிய நடிகர்களோடு அமைந்தது. அடுத்தடுத்து மகேஷ் பாபு, கார்த்தி மற்றும் சூர்யா ஆகியோரின் படங்களில் நடித்தார். சமீபத்தில் அவர் நடித்த அயலான் திரைப்படம் வெளியான நிலையில் அவர் கைவசம் இப்போது இந்தியன் 2 மட்டுமே உள்ளது.

சமீபத்தில் இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது.இந்நிலையில் படம் பற்றியும் அதில் தன்னுடைய கதாபாத்திரம் குறித்தும் பேசியுள்ளார் ரகுல் ப்பீத் சிங். அதில் நான் இது கமல் படம், ஷங்கர் இயக்குகிறார் என்பதால் மட்டும் நடிக்க ஒப்புக்கொள்ளவில்லை. என்னுடைய கதாபாத்திரம் பிடித்தததால்தான் நடித்தேன்.

என் நிஜ வாழ்க்கையில் பொருத்திப் பார்க்கும்படியான கதாபாத்திரம் அமைந்ததால் தான் நடித்தேன். படத்தில் என்னுடைய கதாபாத்திரம் தலைக்கணம் கொண்ட தைரியமான பெண் வேடம் எனக் கூறியுள்ளார்

# ஷங்கர் இயக்கத்தில் அஜித்?

சமீபகாலமாக அஜித் படங்களில் நடிப்பது மிகவும் குறைந்துள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு படம் என்ற வீதத்திலேயே நடிக்கிறார். ஆனால் இனிமேல் அவர் அதிக படங்களில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாராம்.

அதனால் அடுத்தடுத்து தன்னுடைய படங்களில் நடிக்க சில இயக்குநர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக சொல்லப்படுகிறது.இதில் எச். வினோத் மற்றும் இயக்குநர் ஷங்கர் ஆகியோரோடு அஜித் சமீபத்தில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளாராம்.

இயக்குநர் ஷங்கரின் ஸ்டைல் வேறு, அஜித் ஸ்டைல் வேறு என்பதால் இந்த கூட்டணி அமையுமா என்பது ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.





தாயகத்தில்... வவுனியாவில் அமைந்துள்ள

“பண்டாரவன்னியன் புத்தகசாலையில்”

ஈழத்துப் புத்தகங்களை நீங்கள் பெறமுடியும்.

தொடர்புகளுக்கு:
பண்டாரவன்னியன் புத்தகசாலை
வவுனியா, இலங்கை
+94772244616

youtube@akkakuruvi

இது வெற்றிமணியின்
ஒரு இலவச விளம்பரம்.
நம் இளஞர்கள்
முயற்சிக்கு
கைகொடுப்போம்!

விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.



















விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.